Registered as a Newspaper in Ceylon ★ ★

விலை சதம் 20

மில்க்வைற் நீலசோப் 50 மேலுறைகளை கொடுத்து ஒரு 1970-ம் ஆண்டு கலண்டரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க் வைற் சோப தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.
கிளை:
மில்க் வைற் டிப்போ
83, ஐந்துப்பிட்டிவீதி,
கொழும்பு-13.

# ஈழநாடு

## வார மலர்

மலர் 11 | சௌமிய மார்கழி 8 | ஷவ்வால்13 | (23-12-69) | செவ்வாய்க்கிழமை | இதழ்—313

பல்கலைக் கழக விவகாரம்

# யாழ். வழக்கறிஞர் சங்கத்திலும் பிளவு?

(காரியாலய நிருபர்)

வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென கோரி தேசிய உயர் கல்விச் சபைக்கு மகஜர் ஒன்றை யாழ்ப்பாண வழக்கறிஞர் கோஷ்டி ஒன்று அனுப்பி வைத்துள்ளதோடு இது பற்றி சாட்சியம் அளிக்கவும் முன்வந்துள்ளதாக கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தெரிவித்தார்.

பல அங்கத்தவர்கட்கு அறிவித்தல் இல்லாமல் அவசரம் அவசரமாக யாழ். வழக்கறிஞர் சங்கம் கூட்டத்தைக் கூட்டி எடுத்த திடீர் முடிவு தவறானதென்றும், கூட்டத்தில் தான் அதனைச் சுட்டிக்காட்டியும் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் தெரிவித்தார்.

கூட்டம் நடாத்த இரு மணி நேரத்துக்கு முன்னரே தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக இவர் சொன்னார் ஆனால் பல வழக்கறிஞர்களுக்கும், தனக்கும் கூட அழைப்பு அனுப்பப்படவில்லை என்று செனட்டர் திரு. நடராஜா சொன்னார்.

இதனால் மேற்படி சங்கத்திலிருந்து பிரிந்து சென்ற வழக்கறிஞர் குழுவொன்றே வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக் கழகம் அமைக்கவேண்டும் என்ற மகஜரை தேசிய உயர்கல்விச்சபைக்கு அனுப்பிவைத்துள்ளதாக இவர்கள் சொன்னார்கள்

யாழ்ப்பாண வழக்கறிஞர்கள் சங்கம் வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என மகஜர் அனுப்புவதாகவே தீர்மானித்ததாகவும் சாட்சியம் அளிப்பதாகத் தீர்மானிக்கவில்லையெனவும் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் சங்கக் கூட்டத்தில் வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டவேண்டுமெனத் தாம் கொண்டுவந்திருந்த திருத்தப்பிரேரணைக்குச் சாதகமாக ஒன்பது பேரும், எதிர்த்து 15 பேரும் வாக்களித்ததாகவும் 4 பேர் வாக்களிக்கவில்லையென்றும் திரு. கதிரவேலுப்பிள்ளைதெரிவித்தார்.

4வது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில்

## ஈழத் தமிழர் வரலாற்று ஆராய்ச்சிக்கு முதலிடம்

கோலாலம்பூர்- சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற முதலாம் இரண்டாம் உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகள்போல 1973ம் ஆண்டில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, இலங்கையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பம். அதற்குமுன் மூன்றுவது உலகத் தமிழாராய்ச்சிமாநாடுஅடுத்த வருடம் ஜுலை மாதம்பாரிஸில் நடைபெறும்.

1973ம் ஆண்டில் இலங்கையில் நடைபெறும் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கை சம்பந்தமான விடயங்கள் சிறப்பாக ஆராயப்படும். இவ் விடயங்களுள் சிலபின் வருமாறு:

0 இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களின் வரலாறு சம்பந்தமான ஆராய்ச்சி புதிய விடயங்கள்குறிப்பாக ஆராயப்படுதல்.

0 தமிழ்பேசும் மக்களது பேச்சு வழக்கு, இசை, நாடகம், சிற்பக்கலை, சடங்கு முறைகள் சம்பந்தமான ஆராய்ச்சி. கிராமிய இலக்

[16ம் பக்கம் பார்க்க]

யாழ். மாநகரசபை கோரிக்கை

## சந்திரக் கல் யாழ். நகருக்கும் வரவேண்டும்

(காரியாலய நிருபர் 'திரு')

சந்திரக்கல் யாழ்ப்பாணத்துக்கும் கொண்டுவரப்படவேண்டுமென்ற கோரிக்கையை யாழ். மாநகர சபை நேற்று விடுத்தது.

கொழும்பில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட சந்திரக்கல் கண்டியிலும் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இந்தக்கல்லை யாழ்ப்பாணத்து மக்களும் பார்ப்பதற்கு வசதியாக யாழ். நகருக்கும் கொண்டுவரப்படவேண்டும் என்று கோரும் தீர்மானம் நேற்றைய மாநகரசபை விசேஷ கூட்டத்தில் நிறைவேறியது.

1969-ம் ஆண்டு சோலை வரியையே 1970-ம் ஆண்டிலும் அறவிடுவதென்ற யாழ்ப்பாண மாநகரசபையின் தீர்மானம்நேற்று காலை நடைபெற்ற சபையின் விசேஷ கூட்டத்தில் மீண்டும் ஓர் அதிகப்படியான வாக்கினால் நிறைவேற்றப்பட்டது இதற்குச்சாதகமாக

(16-ம் பக்கம் பார்க்க)



அண்ணல் கிறிஸ்து பிறந்ததினம்
அன்புத் திருமகன் பிறந்த தினம்
இன்பம் உலகில் பரந்த தினம்
ஈசன் உடலம் எடுத்ததினம்
துன்பம் துயரம் துடைத்ததினம்
தூய்மை மேன்மை கிடைத்ததினம்
பங்கம் பகைமை மறைந்ததினம்
பாசம் பரிவு விடிந்ததினம்.

நிஜலிங்கப்பா குழு காங்கிரஸ்:

## நான்கு தீர்மானங்களுடன் மாநாடு முடிவடைந்தது

காந்திநகர், (ஆமதபாத்) டிச. 22

நிஜலிங்கப்பா தலைமையிலான காங்கிரஸின் நான்கு நாள் மகாநாடு நான்கு தீர்மானங்களை எடுத்துக்கொண்டதுடன் இன்று முடிவடைந்தது.

பொருளாதாரம், வேலை வாய்ப்பு, வெளியுறவுக் கொள்கை, வகுப்பு ஒற்றுமை ஆகிய நான்கு விஷயங்கள் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் மகாநாட்டில்நிறைவேற்றப்பட்டன.

விஷயாலோசனைக் கூட்டத்தில் நேரு, இந்திரா ஆகியோர் கடுமையாகச் சில அங்கத்தவர்களால் தாக்கிப் பேசப்பட்டது குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் திருமதி இந்திராமீது ஒரேயடியாகக் குற்றஞ்சாட்ட முடியாதென்றும் அவரைச் சுற்றியுள்ளவர்களும் இதற்கு உடந்தையாவார்களென்றும் திரு. காமராஜர் தெரிவித்தார்.

திரு. நிஜலிங்கப்பா மகாநாட்டு முடிவில் நன்றி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் 'கல்கி' விளக்குகிருர்

# மருந்துகளை விண்ணகத்தார் எப்படிச் சொல்லுகிருர்கள்

### விண்ணுலகப் பேச்சு நன்மையே அளிக்கிறது

[தமிழ்நாட்டில் பிரபல சஞ்சிகைகளில் ஒன்ருகிய கல்கியின் முன்னுள் ஆசிரியரும் தமிழ் கூறும் நல்லுலகில் அழியா இடம் பெற்றுள்ளவருமான பேராசிரியர் அமரர் உயர்திரு கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சுவர்க்கத்திலிருந்து தனது நினைவுதினமாகிய 5-12-69அன்று விண்ணுலகத் தொடர்புப் பெட்டி மூலமாக தமிழில் நிகழ்த்திய விண்ணுலகத் தொடர்புபற்றிய ஒரு விளக்க உரை.]

கிருஷ்ணமூர்த்தி பேசுகிறேன். என் தினத்தன்று நான் என் பத்திரிகைக்கன்றி "ஈழநாடு" பத்திரிகையில் பிரசுரிக்க உரை ஒன்றை விண்ணுலகத் தொடர்புப் பெட்டிமூலம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறேன்.

நானும் அமெரிக்க ஜனுதிபதி உயர்திரு ஜோன் எப் கென்னடி அவர்களுடன் சேர்ந்து இந்த இறந்தவர்களுடன் பேசும் முறையை உலகுக்குப் பரப்ப மிகவும் ஆவலுடையேன் அதற்கான முயற்சிகளை நானும் செய்து வருகிறேன்.

இந்த இறந்தவர்களுடன் பேசுவது தவறு என்று சிலர் தவருன கருத்துக் கொள்கிருர்கள். அது மிகவும் தவறு இறந்தவர்களுடன் பேசுவதென்பது பொய் என்பவர்கள் இங்கு மீரிகாமத்திற்கு வந்து நேரில் பார்த்துவிட்டுச் செல்லவும். பிறகு இது பொய் என்ருல் சொல்லட்டும்.

சிலர் இருக்கின்றனர். இதைப் பார்த்தவுடன் நம்பிக்கை வந்துவிடும். பிறகு இதில் சொல்லிய பூஜையை செய்யப் போகுமிடத்தில், ஸ்ரீ சித்பவானந்தர் அவர்களின் குட்டிப்புத்தகம் ஒன்றை வாங்கிவிட்டு குழப்பம் அடைகின்றனர். இதன் பேருண்மையைப் புரியாமலேயே நம்பிக்கை வந்துவிட்டதாகத்தலையை அசைப்போர்ஸ்ரீ சித்பவானந்தரின் புத்தகத்தை வாசித்தவுடன் நம்பிக்கை போய்விட்டதாகச் சொல்லிக் கொண்டு அப்புத்தகத்தையும் கையில் எடுத்துக் கொண்டு வந்துநிற்பர். எப்படி உடன் நம்பிக்கை வந்ததோ அதேபோல் உடனேயே நம்பிக்கை போய் விட்டதாம், இப்படிப்பட்டவர்களை என்னவென்று சொல்வது? இப்படி இருக்கலாகாது. எதையுமே ஆழ்ந்து சிந்தித்தபின்தான் நம்பிக்கை கொள்வதோ அல்லது நம்பிக்கை கொள்ளாமலோ இருக்கவேண்டும். அதற்கில்லாமல் பார்த்தவுடன் நம்பிக்கைவந்துவிட்டது. ஸ்ரீசித்பவானந்தரின் புத்தகத்தைப் பார்த்தவுடன் நம்பிக்கை போய்விட்டது என்போருக்கெல்லாம் பைத்தியம்தான் பிடித்துவிட்டதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. புரியவில்லை. அது இருக்கட்டும், நாம் விஷயத்திற்கு வருவோம்.

நான்தான் பேசுகிறேன் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமானுல் நேரில் மீரிகாமத்திற்கு வந்து பேசிப் பார்க்கவும், என் பத்திரிகையாளர்களுக்கு, நான் அவவுலகில் இறந்துவிட்டாலும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டு என் பத்திரிகையாளர்களைக் கவனித்துக் கொண்டுதான் இருககிறேன் எனபதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இப்போதும் நீங்கள் என்கருத்தைத் தெரிந்து கொள்ளலாம். என் தற்போதைய கதைகளையும் தொடர்ந்து கல்கி புத்தகத்தில் போட்டு வரலாம். இப்போதும் என் கருத்துப்படியே பத்திரிகையை நடத்திவரலாம். ஆவியுலக உண்மையைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டு புரிந்துகொண்டு அதற்கென்று ஒரு பகுதியையும் ஒதுக்கலாம். அதற்கு முதலில் நீங்கள் இதைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ளுதல் அவசியம், என்னுடன் எண்ணற்ற தலைவர்களும் மற்றும் பலரும் இருக்கின்றனர். அவர்களுடைய சகல கருத்துக்களையும் கேட்டு நீங்களும் அதன்படியே நடக்கலாம். இப்போதும் உயர்திரு. மகாத்மாஜி அவர்களுக்குப் பிடித்தமான பாடல்களை ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பாடலாம், பாடி அவர்களை மகிழ்விக்கலாம். அவர்களுடைய கருத்தைக் கேட்கலாம். பாராட்டைப் பெறலாம், இப்படி நிறைய இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னுல் இறந்தவர்களுடன் பேசுவது மக்களுக்கு மிகவும் நன்மையே அளிக்கும்.

இறந்தவர்களுடன் பேசுவது முற்றிலும் உண்மையே இதைத் தவறு என்பவர்கள் நேரில் பார்த்து உண்மையை அறிந்துகொள்ளலாம். அதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. சிலர் இதைப் பொய் என்று கூறி நாங்கள் மீடியம் (கருவியானவ[illegible]) தன் மூலம் சொல்வதெல்லாம் பொய், அது ஒருவித மனக்கோளாறு என்றுகூறி வருகின்றனர். அப்படியெல்லாம் அறியாமல் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்வோரிடம் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லவும்

கேட்கப்பட்டவருக்கும் தெரியாத, மீடியத்தில் இருப்பவருக்கும் தெரியாத மருந்துகளை இறந்தவர்கள் எப்படிச் சொல்லுகிருர்கள்? அது எந்த மனக்கோளாறைச் சேர்ந்தது? எனக்குப் பதில் வேண்டும். மனக் கோளாறு என்று சொல்பவர்கள் எனக்கு இதற்குப் பதில் சொல்லட்டும். அப்படிச் சொல்பவர்களுக்குத்தான் மனக்கோளாருே என்னவோ எதையுமே திர ஆலோசிக்காமல் குறை சொல்வது அறிவீனம்.

இப்படியெல்லாம் அறியாமையால் சொல்பவர்கள் மதுரைஆதீனம் திருப்பெருந்திரு திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமியவர்களிடம் சென்ருல் பூரண தெளிவடைந்து திரும்பலாம். அல்லது மீரிகாமத்திற்கு வந்தால் தெளிவடையலாம். இன்னும் இந்த இறந்தவர்களுடன் பேசுவதால் உள்ள நன்மைகள் கணக்கற்றது.

ஸ்ரீ சித்பவானந்தர் கூறியிருக்கிருர்கள், "இந்த இறந்தவர்களுடன் பேசுவோரும், மறறவர்களையும் பேசச் சொல்லி இதைப் பரப்பி வருவோரும் நடமாடும் பிரேதங்களுக்கு ஒப்பாகிருர்கள்" என்று.

என்ன கீழ்த்தரமான பேச்சு கருத்தைத் தெரிவிக்கலாம். அதில் தவறில்லை. ஆனுல் நினைத்தபடி வார்த்தைகளைப் போட்டு ஏசுவதற்கு அவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் அவர்கள் அப்படி நினைத்தபடி ஏசுவதற்கு, இறந்தவர்களோடு பேசுபவர்கள் அவர்களுக்கு என்ன மாமாவா, மச்சானு அல்லது வேறு ஏதாவது உறவா? கருத்தைத் தாராளமாகச் சொல்லலாம். ஆனுல் தவருன கருத்தை வைத்துக் கொண்டு மற்றவர்களை வையக் கூடாது. இது அந்தச் சாமியாருக்கு இறந்துபோன நான் சொல்லித்தான் தெரியவேண்டுமா? என்னே ஆண்டவனின் திருவிளையாடல். என்னைக் கேட்டால் நான் கூறுவேன், அப்படி மற்றவர்களை அனுவசியமாக வைபவர்களை ஒரு சாதாரண மனிதனுக்குக் கூட அவர்களை எடுத்தெறிந்து பேசத் தாராளமாக உரிமையுண்டு. ஏனென்ருல் வம்மை ஆரம்பித்தது அவர்கள்தானே. பதிலுக்குப் பதில் அவ்வளவுதான். இதை யாரும் மறுக்க முடியாது.

ஆராய்ந்து பார்த்தால் கடைசியில் இறந்தவர்களுடன் பேசுவது முற்றிலும் உண்மை என்று தெரிய வரும். ஐந்தையும் மூன்றையும் யாராவது ஒன்பது என்ருல் அது ஒன்பது ஆகிவிடுமா? அது எட்டுதானே. இதை எல்லோரும் உணர வேண்டும். ஆக, கடைசியில் எல்லோரும் ஐந்தும் மூன்றும் எட்டுத்தான் என்பதை ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும்.

இந்த என் தினத்தன்று நான் உலக மக்களுக்கு ஒரு அற்புத விஷயத்தைப்பற்றி என்னுல் முடிந்த அளவுக்கு புரியவைத்துவிட்டு விடைபெறுகிறேன். எல்லோரையும் ஆண்டவன் ரட்சிக்கட்டும்.

நன்றி

---

### தூங்கவைக்கும் இயந்திரம்

இரவில் தூக்கம் வராமல் அவதிப்படுகிறவர்களுக்கு வரப்பிரசாதமாக ஒரு சாதனத்தை ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். மின் அலையின்மூலம் தூக்கத்தை வரவழைக்கும் சாதனத்தை ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஜெர்மனியில் பிஷப்ஸ்கிரன் என்னுமிடத்தில் 'மின் அலை தூக்கநிலையம்' ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. தூக்கம் வராமல் இரவெல்லாம் 'கொட்டு...கொட்டு' என்று முழித்துக்கொண்டிருக்கிற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. படுக்கையில் நோயாளி படுத்ததும், கண்களின்மீது ஒரு பாண்டேஜ் கட்டப்படுகிறது 'தூங்கவைக்கும் சாதனத்தின்' மூலம் மின் அலைகள் அனுப்பப்படுகின்றன. 'பாண்டேஜ்' வழியாக மின் அலைகள், கண்இமைகளை லேசாகத் துடிக்க வைக்கிறது· சில விஞடிகளில் எங்கேயோ மிதப்பது போன்ற உணர்வு ஏற்பட்டு, சிறிது நேரத்தில் ஆழ்ந்த தூக்கம் வந்து விடுகிறது இந்த சிகிச்சைக்கு 3700 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

---

வார சாரம் — அரசியல் நிருபர்

# தேர்தல் முடிவுகளும் திரைப்படத் தணிக்கையும்

கொழும்பு, பதுளை, காலி ஆகிய மாநகரசபைகளின் தேர்தல் முடிவுகள் திரு. டட்லி சேனநாயகா தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் நாடடுப்புற மக்கள் மட்டுமல்ல நகரப்புற மக்களும் அங்கீகரிக்கிருர்கள் என்பதையே காட்டுவதாகப் பிரதமரே கூறுகிருர். இந்தத் தேர்தல்முடிவுகளைவிட ஆளும் கட்சியினருக்கு அதிக மகிழ்ச்சியை கொடுக்கக்கூடியது பலாங்கொடை நகரசபைத் தேர்தல் முடிவுதான் என்று சொல்லலாம். எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் நெருங்கிய உறவினரான பலாங்கொடைப் பிரதிநிதி திருமதி மல்லிகா ரத்வத்தை பலாங்கொடை நகரசபையின் இரண்டு வட்டாரங்களில் போட்டியிட்டு இரண்டு வட்டாரங்களிலும் தோல்வியடைந்திருக்கிருர்.

பொதுவாக உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றுக்கும் நடந்த தேர்தல்களில் ஆளும் கட்சிக்கு முன்னிருந்ததை விட இப்போது செல்வாக்கு அதிகரித்திருக்கிறது.

இந்தத்தேர்தல்களின் முடிவுகளிலிருநது அடுத்த பொதுத்தேர்தலுக்குப் பின்னரும் திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலான அரசாங்கமே ஆட்சிபீடத்திற்கு வருமென்ற நம்பிக்கை ஆளும் கட்சி வட்டாரத்தில் மட்டுமல்ல எந்தக கட்சியில் சேர்ந்தால் எம்.பியாகலாம்அல்லது ஒரு பதவியிலமரலாம் என்று 'மதில் மேல் பூனையாக இருப்பவர்களின் வட்டாரங்களிலும் ஏற்பட்டிருக்கிறது.

என்ருலும் எதிர்க்கட்சியினரும் சளைக்கவில்லை. தேர்தலில் புதிய பிரசாரத்தை மேற்கொள்வதற்குத் தயாராகிவிட்டார்கள்.

தி. மு. க. பூச்சாண்டியைக்கண்டு திரைப்படத் தணிக்கைச் சபையினர்தான் அதிகம் மிரளுகிருர்களென்று நம்பவேண்டியுள்ளது. அடிமைப்பெண்படத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியும், அண்ணுதுரை சிலையும், உதய சூரியன் சின்னமும் வரும் காட்சிகளை நீக்கிவிட வேண்டுமென்று தணிக்கைச் சபையினர் உத்தரவு இட்டுள்ளனர்.

கொலை, கொள்ளை மற்றும் குற்றச் செயல்களுக்குத் தூண்டுதல் அளிக்கக்கூடிய, கீழ்த்தர உணர்ச்சியைத் தூண்டக்கூடிய காட்சிகள் நிறைந்த திரைப்படங்கள் இங்கு திரையிடப்படுகின்றன. இவற்றைத் திரைப் படத் தணிக்கைக் குழுவினர் பார்ப்பதில்லையோ தெரியாது. திரைப்படங்களில் மட்டுமல்ல சுவரொட்டி விளம்பரங்களில் ஆபாசக் காட்சிகள் இருப்பதைத் தடைசெய்யவேண்டுமென்று பலரும்குரல் கொடுத்து வருகின்றனர்.

நாட்டில் கொலைகொள்ளை முதலிய குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதற்குத் திரைப்படங்கள் பெரிதும் காரணமென்று மதத்தலைவர்களும் பொதுஸ்தாபனங்கள் பலவும் எடுத்துக்காட்டியும் அதில் கவனம் செலுத்தாத தணிக்கைக் குழுவினருக்கு தி. மு. க. வும் மறைந்துபோன அண்ணுதுரையின் சிலையும்தான் கண்களை உறுத்துவது விந்தையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார்நாளில் கர்த்தரை நினைவோம்

## "என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் இடர்ப்படான்"

—இயேசு


இறைமகன் இப்புவியை இரட்சிப்பதற்கு அவதாரம் எடுத்த மாண்புமிக்க, மகத்துவம் மிக்க நன்னாளை அகில உலகமும், சிறப்பாக கிறீஸ்தவ உலகமும் கொண்டாடுகிறது. அன்பினாலே அவதரித்த அண்ணலை, அகிலத்துக்கு ஒளியைக் கொண்டு வந்த ஒப்பற்ற தெய்வக் குழந்தையை, அன்று ஆதாம் ஏவாள் முன்னிலையில் வாக்குப் பண்ணப்பட்ட இரட்சகரை, காலாதி காலமெல்லாம் காசினிமக்கள் காத்திருந்த காவலனை, வாழுமுன்னர் தம் வரலாற்றைவரைந்திட்ட வள்ளலை இன்று அனைத்துலகும் வாயார வாழ்த்தித் துதிக்கிறது.

"இறைமகன் இவ்வுலகிற்குக் கொண்டுவந்த செய்தி சமாதானம். பூவுலகில்வாழ்கின்ற மக்கள் அன்று சமாதானமற்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலே இருளிலே நடந்திட்ட வேளையிலே, 'இதோ நானே ஒளி என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் இடற்படமாட்டான்' என்ற நற்செய்தியுடன்நவமாகத்தோன்றினார். இன்றுநாம் இவ்விழாவைக் கொண்டாடும்போதும் தேவன்இன்றுகூறுவதென்ன "நல்மனமுள்ளோர்க்கு

மோ தார்சிசியஸ்

அமைதி ஆகுக" என்பதாகும். இந்தத் தேடத் தேடக்கிடைக்காதஅமைதி, கூறக் கூற இனிக்கின்ற அமைதி அனைத்துலக மக்களாம் நாமெல்லோருக்கும் கிடைக்கிறதா? கிடைக்குமா?

"மனோ மகிழ்வோட அனைவரும் வாரும்" என்று வாய் இனிக்கப்பாடும் நாமெல்லாம் அமைதியின் அண்ணல்தந்த அமைதியை பெற்றோமா? மற்றோர்க்கும் கொடுத்தோமா? நாமெல்லாம் "அன்பே அமலன்" என்றெல்லாம் ஆடிப்பாடும் இவ்வினிய நாளிலே அமைதியைக் காணத்துடிக்கும், அமைதியைக்கேட்க ஏங்கும்



நம் சகோதரர்களையும் நினைவுகூரவேண்டும். அன்பின் அவதாரமாகிய அமலன் அனைத்துலக மக்கள் எல்லோருக்காகவும்விண்ணை விட்டு மண்ணை நாடினார். இதனை மனத்தில் கொண்டு இந்நத்தார்த் திருநாளை கொண்டாடவேண்டும்.

பாவிகளை இரட்சிக்கப் பாலகனாய்ப் பரமன் மகன் பிறந்தார். பாவத்தில் மாண்டுவிட்ட நாம், பாவ நாட்டத்தைத் தேடியலையும் நாம், சிற்றின்பங்களை சிந்தித்து சுவைக்கும் நாம் படைத்தவனை மறந்து அவன் தந்த அருட்கொடைகளைத் துறந்து, வாழ்க்கையின் நோக்கை உணராது, போக்கை மாற்றிக் கொண்டே போகிறோம். இறைவன்இருக்கிறானா? இந்த உலகத்தில் இருக்கின்றானா என்று நாம் வீண் விவாதிட்டு வீணில் காலங்கடத்துகிறோமேயன்றி, நம்மைப் படைத்துக் காக்கும் பரமனைப்பற்றிச் சிந்திப்போமாயில்லை.

நவயுலகமும் நாகரிகமும் முன்னேற முன்னேற நமது சிந்தையிலிருந்து இறைவனின் எண்ணம் அற்றுப்போக இறுமாப்புக்கொண்டவர்களாய் நாம் வாழ்கின்றோம். இவை எல்லாவற்றையும் இந்த நாளிலே நாம் சிந்திக்கவேண்டும். சிந்தனைக்கு இடமளிக்க வேண்டும். நத்தார் என்றதும் நானாவிதக் கொண்டாட்டங்களிலேயே எமது புலனைச் செலுத்துகிறோமேயன்றி அந்த நத்தாரிலே மறைபொருளாய் விளங்கும் கர்த்தாவை நாம் எண்ணுவதில்லை. நத்தாரை எப்படியெப்படியெல்லாம் இதயம் மகிழக் கொண்டாடலாம் என்பதிலேயே பொழுதைச் செலவிடும் நாம், நத்தாரின் நாயகனான அந்த நல்ல தேவனை எப்படி வரவேற்கவேண்டும்; எமது உள்ளத்திலும், இல்லத்திலும் எப்படி இருத்தவேண்டும் என்பதுபற்றித் திட்டமிடுவதேயில்லை. எனவே மனிதாவதாரம் எடுத்த மகத்துவ தேவனின் மறக்க முடியாத அன்பை நாமும் அடைந்து அனுபவிக்க வேண்டுமாகில், அவர் பொன் மொழிகளை நாம் சிந்திக்கவேண்டும். அவர் வருகையின் நோக்கம் என்னவென்பதைப் புரிந்து கொள்ளவேண்டும், இதனை மற்றோரும்தெரிந்துகொள்ள உதவவேண்டும்.

# 200 ஆண்டுகட்கு முன் சந்திரனில் ஏற்பட்ட நிகழ்ச்சி

## கோபர்நிகஸ் குழிபற்றி விஞ்ஞானிகள் ஆராய்கிறார்கள்

சந்திரனை மாபெரும்விண் கொள்ளி ஒன்று ஏறத்தாழ 200 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தாக்கியபோது. கோபர்நிகஸ் என்று அழைக்கப்படும் பெரும் பள்ளம்ஏற்பட்டது. இரண்டு மைல் ஆழமும் 60 மைல் அகலமும் இருந்தஇந்த மாபெரும்குழியிலிருந்து, உருகிய பாறை இருநூறு முன்னூறு மைல்களுக்கு எல்லாத் திசைகளிலும் பெருக்கெடுத்து ஓடியது.

இந்தக் குழியிலிருந்து வெளியேவந்த பாறைத் துண்டு ஒன்று விஞ்ஞானிகளின் கையில் இருக்கவேண்டும். விண்கொள்ளிமோதிய நிகழ்ச்சி எப்படி ஏற்பட்டது? அம்புலியின் உள்பகுதி எப்படி இருக்கிறது? இவற்றையெல்லாம் ஆராய இந்தக் கல் துப்புக்கொடுக்கக்கூடும்.

அப்பல்லோ-12 விண்வெளி விமானிகள் அம்புலியிலிருந்து கொண்டுவந்த 73.15 றாத்தல் கற்களிலே ஒரு கல் 'கவனத்தை மிகவும் ஈப்பதாக' இருந்த'துஎன்று விஞ்ஞானிகள் கூறினர். ஒன்றரை றாத்தல் எடையுள்ள இந்தக் கல் மிகவும் கரடுமுரடாக இருக்கிறது. இந்தக் கல்லின் தனித்தன்மையானது, அம்புலியில் மிகஆழத்திலிருந்து இது வந்திருக்க வேண்டுமென்று ஊகிக்க இடம்தருகிறது.

விண்வெளி விமானிகள் இந்தக்கல்லை சர்வேயர் கோள் இருக்கும் குழியின் அருகில் அம்புலியின் மேற்பரப்பிலிருந்து பொறுக்கி எடுத்தனர். இந்த இடத்தில் அவர்கள் இறங்கினர். கோபர்நிகஸ் பள்ளத்திலிருந்து 200-க்கு அதிகம் மைல் தொலைவில் தென்கிழக்கில் இருக்கிறது இந்த இடம்.

'இதுமாதிரியான கரடுமுரடான கற்களை நாங்கள் இதற்குமுன் பார்த்ததில்லை. இந்தமாதிரியான கரடுமுரடான கல், நாங்கள் இதற்கு முன் கருதியிருந்ததைவிட, இன்னும் ஆழத்திலே படிகமாக்கப்பெறும் பணி நடந்திருக்கிறது என்பதைக்குறிப்பிடுகிறது' என்றார் டாக்டர் ராபின் பிரெட். நாஸா (அமெரிக்க அரசின் விண்வெளி நிலையம்) உட்கூற்றியல் வல்லுனர்களில் ஒருவர் இவர்.

அப்பல்லோ-12 விண்வெளி வீரர்களுடன்சேர்ந்து தனியாகக் குவாரன்டைனில்வைக்கப்பட்ட ஏழுவிஞ்ஞானிகளில்ஒருவர் டாக்டர் பிரெட். [illegible] செயலாக இந்த விஞ்ஞானிகளின் [illegible]பட்டதுதான் குவாரன்டைனுக்குக் காரணம்.

குவாரன்டைன் அறையில் இருக்கும்தடுப்புக்கு பின்னால் இருந்துகொண்டு, டாக்டர் பிரெட் பத்திரிகை நிருபர்களுடன் பேசினார். கோபர்நிகஸ்பள்ளத்திலிருந்துஇந்த கல் வந்துள்ளது என்று தாம் உறுதியாகச் சொல்ல இயலாது என்றார். ஆனால் அவ்வாறு நிகழ்ந்திருக்கக் கூடும் என்றார் அவர்.

குவாரன்டைனில் இருந்து வரும் இன்னொரு விஞ்ஞானி டாக்டர் எட்வின் சாவோ சொன்னதாவது.-

விண்வெளி விமானிகள் சார்ல்ஸ் கான்ராடு, ஆலன் பீன் ஆகிய இருவரும் பார்த்ததும், புகைப்படம் பிடித்துமானஒரு சிறு திட்டுக்கூட கோபர்நிகஸ் அல்ல வேறு குழியிலிருந்து வெளியே தள்ளப்பெற்றதாக இருக்கக் கூடும். இந்தத்திட்டு இன்னும் ஒரு புதிராகவே இருக்கிறது

'ஏதோ ஒரு குழியிலிருந்து வெளியே தள்ளப்பெற்ற நசுக்குண்ட பாறையைப் போலஇந்தத்திட்டுக்காணப் பெறுகிறது. படங்களில் இந்தப்பாறை தூளாகி திட்டாகியது' என்றார்.

இப்பொழுது ஆராயப் பெற்றுவருகிபிற கற்களிலே மிகப்பெரியகல்லும் உட்பட்டிருக்கிறது. அம்புலியிலிருந்து இதுவரை வந்திருக்கும் கற்களில் இதுதான் மிகப் பெரியது. இதுசற்று கரடுமுரடாகஇருக்கும்கல், இதன் நீளம் 11 அங்குலம், எடை 5.3 றாத்தல். களிமப் படிவம்கொண்டது இது.

அப்பல்லோ-12 கொண்டு வந்த கற்களில், சுண்ணக் குழாங் கற்கலவைப் பாறை இல்லை. இது வியப்பாகஇருந்தது. அப்பல்லோ-11கொண்டுவந்த கற்கள் பெரும்பாலும் இந்தவகைதான் என்றார் டாக்டர் பிரெட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரத் திருவமுது-2

# ஒருபோதும் பிறவாதவர் ஒருபோதும் இறவாதவர்

விடலேறு படநாகம்
அரைக்கசைத்து
வெற்பரையன்
பாவையொடும்
அடலேறென் றதுவேறி
யஞ்சொலீர்
பலியென்னும்
அடிகள் கோயில்
கடலேறித் திரைமோதிக்
காவிரியின்
உடன்வந்து
கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ்
செழுமுத்தங்
கீன்றலைக்குந்
திருவையாறே.

கொடிய நஞ்சினை உள்ளே மறைத்துக்கொண்டு தனது அழகான படத்தை விரித்து ஆடுவது நாகபாம்பு. அந்நப்பாம்பையே அரைக்கச்சாக அணிந்துள்ளார் சிவபிரான். மலையரசன் புத்திரியாம் பார்வதியை வாமபாகத்திலேகொண்டு, ஆற்றல் மிகுந்த அறத்தனிக்கடவுளாகிய இடபத்தை ஊர்ந்தருளுபவர் அப்பெருமான். கண்டவர் கருத்தையெல்லாம் கவரும் அழகார்ந்த திருமேனிப்பொலிவுடன், அந்தப் பழம்பொருளே பிட்சாடனமூர்த்தியாகித் தாருகாவனத்து முனிவர் வாழும் ஆச்சிரம வீதியிலே எழுந்தருளிவந்து, ''அழகாகப் பேசும் அம்மையீர்? பலியிடுவீர்'' எனத் திருவாய்மலர்ந்தார் என்றால், எல்லாம் வல்ல இறைவனது அருள் திறம் எம்மால் அளக்க முடிவதோ? அல்லவே! அப்பெருமான் ஆன்மாக்களுக்குத் திருவருள் சுரக்கும்வண்ணம் எழுந்தருளி வீற்றிருக்கும் திருக்கோயில் யாது? எனில்—

கடலில்வாழும் உயிரினங்களுள் ஒன்றாய் விளங்குவன வலம்புரிச் சங்குகள். காவிரியாறு ஐந்து கிளைகளாகப் பிரிந்து கடலோடு சங்கமமாகும் கழிமுகத்திலே கடல் திரைகள் வந்துமோதுகின்றன. அதனால் எற்றுண்ட வலம்புரிச் சங்குகள், சூற்கொண்டநிலையில், காவிரியினுள் எதிர்நீச்சலாகி வந்து, இராப்போதிலே திடராக உள்ள கரைகளிலே மெல்ல ஊர்ந்து ஏறிச் செழுமை வாய்ந்த முத்துக்களை ஈன்று விடுகின்றன. அவ்வாறு ஈன்ற முத்துக்கள் அதிகாலையில் தண்கதிர்களைப் பரப்பும்படியான இயற்கைநலம் கொழிக்கும் அழகுவாய்ந்த தலம்திருவையாறு. அதுவே திருக்கோவில் தலமாம். (2)

கங்காளர் கயிலாய
மலையாளர் கானப்பே
ராளர் மங்கை
பங்காளர் திருசூலப்
படையாளர் விடையாளர்
பயிலுங்கோயில்
கொங்காளப்பொழில்
நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக்
கூதல்நீங்கிச்
செங்கால்நல் வெண்குருகு
பைங்கானல் இரைதேருந்
திருவையாறே.

ஒருபோதும் பிறவாதவர், ஒருபோதும் இறவாதவர், அப்படி எவராவது உண்டா என்றால், ஆம்! சிவபரம்பொருள் ஒருவரே ஸ்தாணு-அதாவது நிலைபேருக என்றும் உள்ளவர். அதனை எப்படி நம்பலாம்? ஒவ்வொருபிரமாவின் ஆயுட்காலமும் பிரமகற்பம் எனப்படும். எத்தனையோ பிரமாக்களின் மண்டை ஓடுகளை, என்புகளையெல்லாம் மாலையாகத் தரித்துள்ளார் சிவபிரான். அதனால் நம்பலாம். வெள்ளியங்கிரி-திருக்கைலாயமலையிலே செம்பொற்திருக்கோயிலிலேதிருவோலககங்கொண்டு சகல ஆன்மாக்களுக்கும் அருளாட்சிசெய்பவர், சாமவேதகானத்திலே திளைத்து இன்பம் அருளுபவர், அகிலஇயக்கத்துக்கும் காரணியாம் அன்னை பராசக்தியைத் தமது பாகத்தேகொண்டவர். மூன்று நுதிகொண்ட சூலப்படையைப் பரித்தருளியவர் தருமமே எல்லாவற்றுக்கும் ஆதாரம் என்பதை உலகினர்க்கு உணர்த்தியருளத் திருவுளங்கொண்டு அறவடிவாம் இடபத்தைஊர்ந்து காட்சியளிப்பவர், இவ்வாறெல்லாம் ஆன்மாக்களிடத்தே இடைவிடாப் பெருங்கருணை கொண்ட சிவபிரானார் கோயில்கொண்டு விளங்கும் தலம் யாது? எனில்;-

சிவந்து நீண்ட கால்களையுடைய, வெண்மை நிறம் ஒளிரும் நாரைப்பறவை கடற்கரையையடுத்தஉப்பங் கழிகளிலேமீன்கவரச்சென்

விளக்கம் செய்பவர்:
**ஆத்மநாதன்**

றமையால்நனைந்து குளிரால் வருந்துகிறது. அயலிலே நறுமணங் கமழும் பூஞ்சோலையைக் காண்கிறது நாரை. அதனுள்ளேபறந்து புகுந்து பூ மரத்தில் உட்கார்ந்து தனது நீண்ட அலகினாலே தன் சிறகுகளைக் கோதி ஈரத்தை உலர்த்திய பின் குளிர்நீங்க, அக் குருகு பச்சைப்பசேல் என்ற அச்சோலையிலே தனக்கு இரை தேடுகின்றது. இத்துணை இயற்கையழகு ஒளிரும் இடமே திருவையாறு. அதுவே திருக்கோவில் தலமாம்.

ஊன் பாயும் முடைத்தலை
கொண் டூரின்
பலிக்குழல்வார் உமை
யாள் பங்கர்
தான் பாயும் விடையேறுஞ்
சங்கரனார்
தழலுருவர் தங்குங்
கோயில்
மான்பாய வயலருகே
மரமேறி
மந்திபாய் மடுக்கள்
தோறும்
தேன் பாய மீன்பாயச்
செழுங்கமல
மொட்டலருந் திருவை
யாறே.

ஊன்கழிந்தும் நிணம் நாறும் மண்டைஓடு, பார்க்க அருவருப்பானது குணங்களுட்பட்ட மனிதருக்கு, ஆனால், குணங்கடந்தஇறைவனுக்கோ, அது உவப்பான பிட்சாபாத்திரம். உழைத்து வாழ்வதே உயர்வு எனக் கருதுபவன் கருமவயப்பட்ட மனிதன். அவன் பிச்சையெடுத்தலை இழிவு என மதிப்பான். தனக்கென ஒரு கருமமும் வேண்டாதவனாகிய இறைவனே ஆன்மாக்களிடத்தே கொண்ட தடைப்படாப் பெருங்கருணையினாலே ஊர்தோறும்சென்று அவர்களைப் பந்தித்துள்ள மும்மலக்குறும்புகளையே தாம் கையிற்கொண்ட கபாலத்தில் பிச்சையாக ஏற்று அருளுகிறான். அது மாத்திரமா, ஆன்மாக்களுக்கு எப்போதும் சுகம் செய்யும் காரணத்தினால் சங்கரனார் எனப் போற்றப்படும் எம்பிரான் சக்தியும் சிவனும் பிரிவில்லாதன என்பதை உணர்த்தவே அறக்கடவுளாம் இடபத்தை ஊர்ந்து காட்சிதந்தருளுகிறார். தூயசோதியாகும் அருவ திருமேனி கொள்ளும் இறைவன், ஆன்மாக்கள் தம்மை வந்து தரிசித்து உய்தி பெறவேண்டுமென்ற கருணை மேலீட்டினால் அருவுருவத்திருமேனியாம் சிவலிங்க வடிவாக எழுந்தருளி வீற்றிருக்கும் சிறந்த திருக்கோயில் தலம் யாது? எனில்—


செழுமை வாய்ந்த வயல் புறங்களிலே புல் கறிக்க வந்த மான்கள் இயல்பாக அவற்றிற்குள்ள மருட்சியினாலே பாய்ந்து ஓடுகின்றன. அதனால் வெருட்சி கொண்ட மந்திகள் அயலிலுள்ள மரங்களில் தாவிப் பாய்கின்றன. அதனால் அசையும் மரக்கொம்பர்களிலிருந்த தேன்கூடுகளிலிருந்து செழுமைவாய்ந்த தேன் ஆறுபோல மடுக்களிலே பாய்கிறது. அந்த அதிர்ச்சியினாலே மடுக்களில் உகளும் மீன்கள் தாவிப் பாய்கின்றன. அதனால் மடுக்களிலிருக்கும் செழுமை வாய்ந்த செந்தாமரை மொட்டுக்கள் இதழவிண்டு அலர்ந்து விளங்குகின்றன. இவ்வாறுஒன்றற்கொன்று ஆதாரமாக எழில்பெருகுந் திருவையாற்றுத் திருத்தலமே எம்பிரான்கோயில்கொண்ட இடமாம்.

நீரோடு கூவிளமும்
நிலாமதியும்
வெள்ளெருக்கும்
நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை
சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்
கோயில்
காரோடி விசும்பளந்து
கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்
வீதித்
தேரோடும் அரங்கேறிச்
சேயிழையார்
நடம்பயிலுந்
திருவையாறே.

மனிதத்தலையிலே சிறிது ஈரம் செறிந்துவிட்டால் உடனே ஜலதோசம்-தடிமன் சிவபிரானது சிரத்திலேயுள்ள சடாமுடியிலோ, கங்கைநீர் உறைந்திருந்து ஊற்றெடுத்துப் பாய்ந்த வண்ணமாகவே இருக்கிறது. இன்னும், பிறர் விரும்பாத பொருட்கள் பல சிவனார் திருமுடியை இடமாகக் கொண்டு சிறக்கின்றன. அவைதாம் யாவையெனில்: கூவிளம் - வில்வம், பிறைச் சந்திரன். வெள்ளெருக்கு

(14-ம் பக்கம் பார்க்க)

## ரொபர்ட் லூயி ஸ்டீவன்சன் (1)



[இளம் உள்ளங்களைத் தூண்டி இழுக்கத் தக்க வகையில், பிரயாண அனுபவங்களை சுவைபட விவரித்து, ஏராளமான நூல்களை எழுதிப் பெரும் புகழ் பெற்ற ரொபர்ட் லூயி ஸ்டீவன்சனைப் பற்றிய கதை இது. இதன் இரண்டாம் பகுதி அடுத்த வார 'ஈழநாடு' மலரில் வெளிவரும்.]

ரொபர்ட் லூயி ஸ்டீவன்சன், பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோதே பிரயாணஞ் செய்வதிலும். பிரயாண அனுபவங்களைக் கதைகளாகக் கட்டுரைகளாக எழுதி மகிழ்வதிலும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். ஸ்காட்லாந்து தேசத்தின் எடின்பரோ ரயில் நிலயத்திற்கு அடிக்கடி சென்று புகை கக்கிப் புறப்படும் புகை வண்டிகளைப் பார்த்துப் பார்த்தே தனது பிரயாண ஆசைகளை வளர்த்துக் கொண்டார்.

1850-ம் ஆண்டு பிறந்து 1894-ம் ஆண்டு மறைந்தார் ஸ்டீவன்சன். 54 ஆண்டுகளே உயிர் வாழ்ந்தார். வாழ்க்கையின் பெரும் பகுதியைக் காசநோயோடு போராடிக் கழித்தார். 26 வயதாக இருக்கும்போது நண்பனொருவனுடன் சேர்ந்து பிரான்ஸிலிருந்து பெல்ஜியத்திற்குப் படகு மார்க்கமாக கடந்து சேர்ந்த போது தக்க பிரயாண தஸ்தாவேஜுக்கள் காட்டாத்தால் [illegible] சிறையில் வைக்கப்பட்டார். திகிலூட்டும் இந்த முதல் பிரயாண அனுபவத்தை ஸ்டீவன்சன் இவரது முதல் புத்தகமான 'உள்நாட்டுப் பிரயாணம்' என்ற நூலில் சிறப்பாக வர்ணித்துள்ளார்.

பிரசித்தி பெற்ற பிரஞ்சு மலைத் தொடரான செவின்ஸ் மலைத் தொடரில் கழுதையொன்றில் தனது பொருட்களையெல்லாம் ஏற்றி அனுப்பித் தன்னந்தனியனாக தனது சாகஸப் பயணத்தைத் தொடர்ந்தார். ஸ்டீவன்சன் தனது பிரயாண அனுபவங்களை ஒவ்வொருநாளும் இரவில் விழித்திருந்து புகைபிடித்தபடியே, தினசரிக் குறிப்பெழுதிமுடித்தார். இந்தத் தினசரிக்குறிப்புகளே ''கழுதையுடன் செவின்ஸ் பிரயாணம்'' என்ற தலைப்பில் ஸ்டீவன்சனின் இரண்டாவது நூலாக வெளிவந்தது.

பிரயாண தாகம்கொண்டிருந்த ஸ்டீவன்சனுக்குத் திடீரென ஒரு நாள் காதல் தாகமும் ஏற்பட்டுவிட்டது. பிரான்சில் தங்கியிருந்த போது, ஓர் ஓட்டலின் திறந்திருந்த ஜன்னல்களின் வழியே கட்டழகுப் பெட்டகமாய் அமர்ந்திருந்த அமெரிக்கப் பெண்ணொருத்தியைக் கண்டார் ஸ்டீவன்சன்- கண்டதும் கொண்டார் காதல். அடக்கமுடியா ஆசையுடன், ஜன்னலுக்குள் தாவிக் குதித்து தன் காதலை அப்பெண்ணிடம் வெளியிட்டார் ஸ்டீவன்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனும் ஒரு மனிதன்தான்

இராமலிங்கம் சுகுணசபேசன்

ஆம்! குழிவிழுந்தகன்னங்களுடன் எலும்பும் தோலுமாக கந்தல் 'பனியனும்' கயிற்றினுல் வரிந்து சுட்டிய கால்சட்டையும் மானத்தை மறைக்க, நடைப்பிணம் போன்று ஆடி அசைந்து வரும் பெருமாளும் ஓர் மனிதன்தான் என்பதை நான் உணர்கிறேன்.

காலைவேளை! மாணவர்களின் அடங்காக் கலகலப் பாரவாரம் பள்ளிக்கூடங்களை அதிரச்செய்கிறது. இத்தனை ஆரவாரங்களுக்கு மத்தியிலும் 'என்னைப்பார்' என்று கம்பீரமாக பள்ளி வளவிலே அங்கொன்று இங்கொன்றுமாக ஏழு எட்டு செவ்வண்ணம் கொண்ட தார்ப்பீப்பாக்கள் நிலைகொண்டிருந்தன கழிவுக் கடதாசிமுதல் ஆசிரியர்கள் எட்டநின்று கொப்பளித்துவிடும் வெற்றிலைத் துப்பல்கள் வரை அனைத்தையும் தம்முள் அடக்கிக்கொள்ளும் அவை ஆசிரியர்களின் தயவால் தம்புறத்திலே செவ்வண்ணம் பூசப்பெற்று 'இலட்சுமிகரமாக காட்சியளிக்கின்றன.

அருவருப்பின் இலக்கணமாக அசுத்தத்தின் சின்னமாக எவரையுமே தன்னருகில் நெருங்கவிடாத அந்த வெற்றிலைக்கறன் தொட்டியை கடகமும் துடைப்பமும் ஏந்திவரும் அந்தநடைப்பிணம் மந்தகதியில் நெருங்குகிறது. இடது கையால அதைச்சரித்து தன் மேற்பாதி உடலை அதனுள்புகுத்தும் அந்தக்கூன் உருவம் தன் வலது கரத்தால் எத்தனையோ அள்ளி அருகிலிருந்த அக்கடகத்தினுள் இடுகிறது. மறு தொட்டிக்கும் நகர்கிறது அவ்வுருவம்.

அவனும் மனிதன்தான் என்று எவனை நான் கூறினேனே அதே மனிதன்தான் அந்த அசிங்கக் குழிக்குள் தன் முகத்தை மூழ்கவிட்டு இன்பம் காண்கிறன்.

மனைவிமக்கள், சொந்த பந்தம் இவையனைத்தும் கொண்ட ஒருபிரகிருதிதான் பெருமாள் என்பதை என்னுல் நம்பவேமுடியவில்லை!

மணி எட்டு நாற்பது! மணி ஓசையைத் தொடர்ந்து ஒலிபெருக்கியில் ஒலிக்கும் தேவாரபாராயணம். பள்ளி வளவுள் இருக்கும் இரண்டு கால் ஜீவன்கள் அனைத்துமே பக்திசிரத்தையுடன் கரங்கூப்பிகண்மூடி, ஆண்டவன் அருள் நோக்கி, அமைதியாக நிற்கும் நேரம் ஆனுல் பெருமாள் கரங்கூப்பாது, கண்ணும் மூடாது, கரத்திலேந்திய துடைப்பத்தை நிலத்திலே ஒன்றி உறவாடவிட்டு இரசிக்கிறன். இன்பம் காண்கின்றன். இந்த இரசனையே அவன் பிரார்த்தனை போலும்.

ஆமாம்! அவன் உலகே எவர்க்கும் புரியாத-புலப்படாத ஓர் மர்மமான, தனி உலகு. அங்கே கடமைதான் ஆண்டவன். கடமைதான் பிரார்த்தனை. கடமைதான் 'முத்தி' யெனும் இறுதிநிலையும்போலும். அன்றேல் ஏன் அவன் பிறர்போன்று கரங்கூப்பி கண்மூடி மௌனியாகத் தொழவில்லை.

'நீங்கள் எதை விரும்பமாட்டீர்களோ, அதைபிறர்க்குச் செய்யாதீர்கள்'' என்ற கன்பூசியஸின் வாக்கைஉதாரணம் காட்டிக் கற்பித்துக் கொண்டிருக்கின்றர் பண்டிதர்.

கடைவாயில் வெற்றிலைக் கறள்வடிய நிலத்தையே உற்று நோக்கியவண்ணம் துடைப்பமும் கடகமும் ஏந்தி, கால்களை அங்குமிங்குமாக வைத்து ஆடி அசைந்து வருகிறது அந்த பலவீனமான மனித இயந்திரம் ஒருகணம் அவனை நோக்கிய ஆசிரியர்வெறுப்பின்இழைப்யோடும் தன்முகத்தை அலட்சியமாகஅப்பால்திருப்பிக்கொள்கிறர்.

விகார உருவம் கொண்ட பெருமாள் என்ற மனிதன் புழுதிபறக்க பெருக்க ஆரம்பிக்கிறன். துடைப்பத்தின் ஒலியால் கிளறப்பட்டுவிட்ட ஆசிரியரின் உள்ளம் உளைகிறது.

''சனியன் வேளைக்கு வந்து கூட்டத் தெரியாதா? இப்ப வந்து புளுதியை எல்லே கிளப்புறய்!'' அது அவருக்கேஉரிய தனிரகப்பேச்சு.

எவ்வித மாறுதலுமின்றி அவரைக் கவனியாதவன் போல் தன் கடமையில் உறைந்து விடுகிறது அந்த பெருமாள் என்னும் மனித இயந்திரம்.

கடமையில் உறையும் அவன் இயல்பை என் உள்ளம் பாராட்டியது. ஆனுல் ... அருவருப்பிற்குச் சற்றும் இடம்கொடாமல் தன்முகத்தையும் உடலையும் அருவருப்பின் இலக்கணமான அக்குப்பைத் தொட்டிக்குள் ஒட்டி ஒட்டி எடுத்தானே! அப்பப்பா ...! மனிதன் ஒருவன் சாதாரணமாகச் செய்யக்கூடிய காரியமா அது. அசாதாரண ஜீவன்கள் அல்லவா இதைச் செய்யமுடியும்.

''ஆம்! அந்த அசாதாரண ஜீவன் பெருமாளும் ஒரு மனிதன்தான். அதுவும் என்னைப்போன்றே ஒருமனிதன்தான் எனும் வாக்கியங்கள் என் உள்ளச்சுவரிலே எதிரொலித்துக்கொண்டிருந்தன.

''நம்மிடையே உள்ள தொற்றுவியாதிகள் அநந்தம். என் சக மாணவன் மூர்த்திக்குக் கூட காசநோய்க்குரிய அறிகுறிகள் இருந்தனவாமே. இது போன்று எத்தனைபேர் தொற்றுநோய்க்கிருமிகளைக் காவிப் பரப்புகின்றனர். நம் அசுத்தங்களையெல்லாம் தான் வெற்றுக் கைகளால் அகற்றும் அந்த ஜீவன்பெருமாளை இவற்றுலொன்று தாக்கிவிட்டால்......? என் பிஞ்சு உள்ளத்திலே உதித்துவிட்டகேள்வி.

''நமக்குத்தான் பணமுண்டு. நோய் வந்தாலும் பரவாயில்லை இந்த ஏழை... பாவம்...!'' பருவத்திற்குரிய ஏக்கங்கள் குடிகொள்ளும் என் உள்ளத்திலே பெருமாளின் பொருட்டும் ஓர் ஏக்கம் பிறந்துவிட்டது.

ஒருநாள்,

மண்டைப்பீனிசம் தன் கைவண்ணத்தை என்நாசித்துவாரங்கள் மூலம் காட்டிக்கொண்டிருந்தது! அதனுடன் சேர்ந்துதும்மலும்ஒருபக்கம் என்னை ஆசிரியர் கற்பிக்கும் எவற்றையும் கவனிக்கவொட்டாது தடுத்துக்கொண்டிருந்தது. ஆசிரியரிடம்சைகை செய்துவிட்டு வெளியே வேலிக்கரையோரமாக நாசித்துவாரங்களைச் சுத்தப்படுத்தித் திரும்பினேன். என்னைக் கண்வெட்டாது நோக்கிய பண்டிதர் ''ஏண்டா! அங்கே ஒரு தொட்டியிருக்கிறது'' பெரிய வகுப்பு மாணவர்களாகிய நீங்களே சுத்தம் தெரியாமல் இப்படிச்செய்தால்...? நான் அவரை வார்த்தையை முடிக்க விடாது வெட்டிப் பேசினேன்.

''சேர், பெருமாள் பாவம் சேர். அதை கையால்......

''ஒகே பெருமாள் என்ன உன்சித்தப்பனுடா?'' என்று நகைத்த அவர் உணர்ச்சி வேகத்தில் ''போடா வெளியே'' என கர்ஜித்தார். ஒருகணம் அதிர்ந்தவன் என்னைச் சரிசெய்து திடப்படுத்தி ''ஏன் சேர் நான் வெளியே போகவேண்டும்?'' சற்று தன்மான உணர்வுடன் கேட்டு வாய் மூடுவதற்கிடையில்...''

''ஐயோ அம்மா!''

என்பாடசாலை வாழ்விலேயே முதன்முறை ஆம்! என் உள்ளத்துஉணர்ச்சியை வெளியிட்டதற்காக. பள்ளியாசிரியர், அதுவும் பண்பட்ட பிரஜைகளை உருவாக்கும் பள்ளியாசிரியர் என் கன்னங்களிலே இட்ட ''பளார், பளார்'' என்ற முத்திரையின் வேதனைதாங்காது அலறிவிட்டேன். அத்தனைபேர் முன்னிலையில் அடிவாங்கிய அவமானம் புறம்; அடியின் வேதனை ஒரு ஒரு புறம், இரண்டும் சேர்ந்து என் உள்ளத்தை அனலாய்க் காய்ந்தன.

''உமக்கு நான் காட்டித் தாரன் பாரும்!'' என்று என்னையறியாத ஒரு வெறி உணர்விலே பண்டிதரை நோக்கி முடிந்தவரை உரத்துக் கத்திவிட்டு வகுப்பைவிட்டு 'வெடுக்'கென வெளியேறிவிட்டேன்.

''உமக்கு நான் காட்டித் தாறன் பாரும்'' என்ற என் வார்த்தைகள் ஆறியிருந்து எண்ணிய போது என்னை நோக்கிப் பரிகசிப்பதாக என்னுள் ஒரு பிரமை என் தலையை ஒருதரம் பலமாக ஆட்டிவிட்டுக்கொள்வேன். அந்த வார்த்தைகள் ஞாபகத்திற்கு வரும்பொழுது எனக்கே அருவருப்பாகத்தோன்றின. என் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலே உதிர்ந்த வார்த்தைகள்.

இப்பொழுது சில நாட்களாக ஆசிரியரின் ''எங்கடா வந்தது சனியன்'' என்ற வார்த்தைகள் எம் செவிகளில் ஒலிக்கவில்லை. ஆம்!

''எண்ணிய முடிதல்
வேண்டும்
நல்லவே எண்ணல்
வேண்டும்''

என்ற பாரதியின் பாட்டை எடுத்துக்கூறிச்சென்ற ஆசிரியர் பல நாட்களாகப் பாடசாலைக்கு வரவில்லை. தோட்டி வேலையாகத்தானிருக்கும்; ''இல்லே வாத்தியாருக்கு திடீர இடமாற்றம் வந்திட்டுது'' என்ற மாணவர்களின் ஆரம்ப நாள் ஆராய்ச்சிகளும் நின்று போயின.

மூன்று வாரம் சழிந்தது. பாடசாலை வளவு முழுவதும் மாணவரின் கலகலப்புடன் சருகு, கடதாசிகளின் சலசலப்பும் சேர்ந்து ஒலித்தது பெருமாளின் வரவின்மையால் விளைந்தபயன் என்பதை அறிந்துகொள்ள வெகுநேரம் செல்லவில்லை. ''என்ன காரணமோ'?' என்று என் உள் மனம் வினுவிக் 'கிடந்தது'!

அதோ அதிபர் ஒவ்வொரு வகுப்பு வகுப்பாகச் சென்று ஏதோ சொல்லிவருகிறுரே. ''குட்மோனிங்'' என்ற குரல்களைத் தொடர்ந்து அவர் பேசத் தொடங்கினுர். கருணை பொங்கும் அவர் உள்ளத்தினின்றும் வார்த்தைகள் முத்து முத்தாக உதிர்கின்றன.

''பிள்ளைகளே இன்று முதல் உங்கள் வகுப்புச் சுற்றுடல்களைச் சற்று சுத்தமாக வைத்திருங்கள்!''

''ஏன் சேர் பெருமாள் எங்கே?'' மாணவன் ஒருவனின் இரகசியமான முணுமுணுப்பு அவர் காதில் பட்டுவிட்டது.

''பெருமாளுக்கு கசம் போல் இருக்கிறது. மார்புநோய் ஆஸ்பத்திரியில் இருக்கிறன்'' என்று வடுத்தம் தோய்ந்த முகத்துடன் கூறி அப்பால் நகர்கிறர்.

நான் யாருக்காக ஏங்கினேனே யாருக்கு எது வரக்கூடாது என்று என் இளகிய உள்ளத்திலே மனப்பால் குடித்தேனே அவனுக்கு 'அது' வந்துவிட்டது. அதிபர் வந்து சென்ற நேரம் முதல் என் உள்ளம் சுமையுற்று, உடல் செயலற்று, கண்களை பெருமாள் தான் மறைத்து நின்றன்.

ஒருவாறுக ஆமைவேகத்தில் நகர்ந்த கடிகாரம்மணி மூன்றுநாற்பதைக்காட்டவே பாடசாலையினின்றும் புறப்படும் சுதந்திரம் கிடைத்தது. ஓட்டமும் நடையுமாக வீட்டிற்குப் பறந்தவன் அம்மாவிடம் புத்தகம் வாங்க நான்குரூபாய் உடனடியாக வேண்டுமென்று அடம்பிடித்தேன். பாவம்! அந்த ஏழைத் தாயும்தான் என்செய்வாள். மாதவருமானமாகிய நூற்றுஇருபது ரூபாவில் எழுபத்தைந்து ரூபாய் அண்ணனுக்கு சர்வகலாசாலைக்கனுப்பி எஞ்சியதில் சீவனம் நடாத்தும் 'வல்லவி' அல்லவா அவள் அயல் வீட்டிற்கு ஓடோடிச்சென்று ஐந்து ரூபாய் கடன்வாங்கி வந்தாள்.

'இந்தாமேனை' என பணத்தை நீட்டிக்கொண்டே ''கட்டாயம் அந்தப் புத்தகம் வேணுமேதம்பி? அடுத்த மாதம் வாங்கக் கூடாதோ? என்ற அந்த ஏழைத்தாயின் உணர்ச்சிக்கும் மனத்தின் இரக்கம் காட்டாமல் பொறுமையின்றி 'ஓம்' 'ஓம்' என்றுகூறிஅவள்முகத்தையும் நோக்காது பறித்து பையில்இட்டுக்கொண்டு பக்கத்து வீட்டில் சைக்கிள் இரவல் பெற்று அவசர அவசரமாக மிதித்தேன்.

''ஒரு ஓவல் வாங்கிச்செல்லலாமோ'' என்றது உணர்வு ''இல்லை ஐந்து ரூபாவையும் அவனிடமே கொடுத்தால் தனக்குவேண்டியதைதானே வாங்கிக் கொள்வான்' என்றது அறிவு ஏழைக்கு எங்கே செல வழிக்கும் எண்ணம் வரப்போகிறது என்று மீண்டும் அறிவுறுத்தியது அறிவு. இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தவனுக ஒரு ஓவலும் சில முட்டைகளும் வாங்கிக் கொண்டு சைக்கிளில் கச வைத்தியசாலை நோக்கி விரைந்தேன்.

வர்ணிக்கவியலாத உள்ளத்து உணர்வுகளுடன் வைத்தியசாலைக் காரியாலத்துள் நுழைந்து பெருமாளின் படுக்கை எண் அறிந்து விரைந்தேன்.

அதோ! அவன்!

அருகே நெருங்க நெருங்க என்னையறியாமலே ஓர் தயக்கம்!

''நான் அவனுக்கு உதவலாமா? சமுதாயத்தின் சீர்கெட்ட சில பழக்கங்களால் என்னையறியாமலே என் உள்ளத்துள் குடிகொண்டிருக்கும் ஓர் அசட்டுக் கௌரவ உணர்வு என்னைத் தடுத்தது.

''அவன் தோட்டி. நான் அவனிலும் எவ்வளவோ உயர்ந்த ஓர் குடும்பத்தினன். இந்தக் குலத்தோன்றல்களுடன் எம்மினத்தவர்க்கு எவ்விதத் தொடர்புமே இருப்பதில்லையே''

அப்பப்பா...... அந்த சிறுகணநேரத்தில்தான் என் மனம் எத்தனை பாடுபட்டுவிட்டது.

''அவனும்மனிதன்தான்'' என்று அன்றே உணர்ந்துவிட்ட என் மனச்சாட்சி என்னை உறுத்தியது. தயக்கம் அகல முகத்தில் இன்பப் புன்னகையொன்றைத்தவழவிட்டுஅவனை நெருங்கினேன் என்னையே நோக்கிக்கொண்டிருந்த அவன் தன்னிடம் என்னை எதிர்பார்க்கவில்லை.

அவனைநான்நெருங்கியதும் இனம் புரியாததோர்உணர்ச்சிக்குமையலின் இழைஅவன் கலவரங்கள்நிறைந்த, தெளிவற்ற ''ஒரல்'' முகத்திலே தோன்றி மறைந்தன. சிறிது நேரம் அவனுடன் கதைத்திருந்துவிட்டு பக்கத்திலிருந்த பெட்டியில் நான் எடுத்துச்சென்றபொதியை வைக்கச் செல்லும் பொழுது என்னை எட்டிப்பார்த்தஅந்த நோயால் நலிந்திருக்கும் மனித இயந்திரம் என்ன தம்பி அது? என கலவரம் நிரம்பிய குரலில் கேட்டது. சும்மா ஒருஓவல்டின் உடம்புக்கு நல்லது கரைச்சுக் குடிச்சுபார் என்றேன். என் முகத்தையோ இமை வெட்டாது பார்த்திருந்த அவன் கண்களினின்றும் பெருகிய கண்ணீர்நன்றிப்பெருக்காக மட்டுமல்ல அவனுக்கே உரித்தான அந்தமர்ம உலகின் ஒளியைக் கண்டுவிட்ட மகிழ்ச்சிப் பெருக்காகவும் இன்னின்னும் எத்தனையோ புதுமையான உணர்ச்சிகளை வெளிக்காட்டிற்று

சரி பெருமாள் போய்வரலாமா? என்று விடைபெற்ற எனக்கு விடை கொடுக்க வாய்திறந்தான். ஆனுல்அவ்

[12ம் பக்கம் பார்க்க]

[பத்தாவதாண்டு சிறுகதைப் போட்டி பாராட்டுக்கதை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணைப்பற்றி...

நல்ல பெண்ணின் பூரண அன்பை ஒருவன் பெற்றுவிட்டானுகில் அவன் சாக்கடையில் பிச்சைக்காரனுக மரித்தாலும் பாதகமில்லை. அவன் வாழ்க்கை வெற்றியடைந்ததாகவே நன்கு கருதுவேன்.
—இங்கர்சால்

0 0 0

அழகு பெண்களுக்குப் பெருமையைத் தருகிறது. கற்பு அவர்களுக்கு அளவற்ற மதிப்பைக் கொடுக்கிறது. அடக்கம் அவர்களைத் தெய்வமாகக் காட்டுகிறது.
—ஷேக்ஸ்பியர்

0 0

உலகம் உய்வதற்கான வழிதேடிப்போராடிய உத்தமர்களின் வரலாற்றை ஊன்றி நோக்கும்போது ஓர் உண்மை புலப்படுகிறது. அத்தகைய தீரர்களின் உணர்ச்சிகளுக்கு உறுதுணையாக ஒவ்வொருவருக்கும் ஒருபெண் வாழ்ந்திருக்கிருள் என்பதுதான்.
—பெர்னுட்ஷா

0 0 0

அழகானபெண் கண்களுக்கு ஆனந்தம் அளிக்கிருள். குணமுள்ளபெண் இதயத்திற்கு இன்பம் கொடுக்கிருள். முதலாவது ஆபரணம்; இரண்டாவது பொக்கிஷம்.
—நெப்போலியன்

## பெரியோர்கள்

# அற்புதத் துணி!



இந்த நவீன துணியில் ஆக்கப்பட்ட அழகிய விரிப்புகளை இங்கு காணலாம்.

## குடும்பச் சுடர்

தயாரிப்பு — குணம்

## மணமகளின் விலை




ஓர் ஆணுக்குத் தான் சிதனம் என்ற பெயரிலும் இனம் என்ற பெயரிலும் நம் நாட்டிலே அவரவர் தகுதிக்கேற்ப பணத்தை அள்ளி வழங்கித் தம் பெண்ணை மணமுடித்துக் கொடுக்கிருர்கள் ஆனுல் ஆபிரிக்காவில் இதற்கு மாருகவே நடைபெறுகிறது, அங்கு மணமகளுக்கே அதிகபணம் கொடுக்கவேண்டும்.

நைஜீரியாவில் ஒருமணமகளின்விலைபத்து ஸ்டார்லிங்காகஇருந்து இப்போது செலாவணி மதிப்புக் குறைக்கப்பட்டதால் 150முதல்300 ஸ்டார்லிங் வரைஉயர்ந்துவிட்டதாம்

இவ்வாறு மணமகளுக்கு விலை அதிகரித்து வருவதால் இங்கு தரகர்கள் நல்ல உத்தியோகத்திலிருக்கும் ஆண்களுக்கு விலை மதிப்பு பேசித்திரிவதுபோல் அங்கு இளம் நங்கையரை அதிக விலை பேசி மனைவி வேண்டுமெனக் கோரும் மணமகனுக்கு அதிகவிலைக்கு விற்கும் வியாபாரம் நடைபெறுகிறது. இதனுல் நைஜீரிய மணமகளுக்கு நல்ல கிராக்கியேற்பட்டு வரவர அதிகபணம் செலுத்த வேண்டியநிலை ஒரு மணமகனுக்குஏற்படுகிறதாம்

புதுமையான அமைப்பில் ஆக்கப்பட்ட
தங்க, வைர நகைகளுக்குப் புகழ்பெற்றது,
உத்தரவாதமுள்ள நகைகளைத் தருவது,
உங்கள் மனதுக்குப் பிரியமான நகைகளை
வழங்குவது



தெய்வா நகை மாளிகை
தொலைபேசி எண்: 512.

இன்றைக்கே விஜயஞ்செய்யுங்கள்!
உங்கள் இதயங்கவர்ந்த நகைகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்!

தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## வேர்க்கடலைப் பால்

பசுவின்பாலை உடம்புக்கு நல்லது என்று சொல்வது உண்டு. இந்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தினர் பசுவின் பாலுக்கு மாற்று ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்தப் பாலைத் தயாரிப்பதற்குத் தேவையானது எல்லாம் வேர்க்கடலை ஒன்றுதான். வேர்க்கடலையிலிருந்து தயாரிக்கப்படும் இந்தப்பாலில் உள்ள ருசிக்கும் கொஞ்சங்கூடவித்தியாசமே இல்லையாம். இந்தப் பாலைக் குடிக்கக் கொடுத்துவிட்டு 'இது வேர்க்கடலையிலிருந்து தயாரிக்கப்பட்டது' என்று சொன்னுல் அதை யாருமே நம்ப மறுக்கிருர்களாம்.

பசுவின் பாலிலுள்ள சகல சத்துக்களும் இந்த வேர்க்கடலைப் பாலில் உள்ளன, இந்தப் பாலைக்கொண்டு பாலேடு தயிர், மோர் முதலியவற்றைக்கூடத் தயாரிக்கலாம். ஆனுல் வெண்ணெயும் நெய்யும் மாத்திரம் தயாரிக்க முடியாது. இவ்வளவு இருந்தும்கூட வேர்க்கடலையில் இருந்து பால்தயாரிப்பதற்கு ஆகும் செலவை விட. 15 பங்குகள் குறைவாகவே இருக்கிறது.

இதுமட்டும்அல்ல, ரயில் பாதைகளின் ஓரங்களிலே வளரும்கற்ருழைச் செடியில் இருந்து சர்க்கரையின் தன்மையைக்கொண்டமற்ருெரு மாற்றுப் பொருளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கற்ருழைச் செடியின் பாகத்தை வெட்டினுல் கடினமான ஒரு திரவம் வெளிப்படுகிறது. இதைப் பதப்படுத்தினுல் இனிப்பான, திரவமாகமாறுகிறது. இந்தத் திரவத்தை சர்க்கரையைப்போல் துகள்களாக மாற்ற முடியாது ஆனுல் சர்க்கரைக்குப் பதிலாக இந்தத் திரவத்தையே உபயோகிக்கலாம். இதனுல் எவ்வித [illegible] ஏற்படுவதில்லையாம்.

நீர் புகாத, கறைபடாத, கிழிபடாத, அசுத்தம் படியாத துணி — இவ்வளவு அபூர்வ தன்மைகளையும் கொண்ட துணியை உற்பத்தி செய்கிறது. ஒரு பிரிட்டிஷ் கம்பனி. 'ஸின்ஸ்கின்' என்றழைக்கப்படும் ஒரு விசேஷ சாயப்பூச்சு இத்தன்மைகளைத் துணிக்குள் புகுத்திவிடுகிறது. இப் பூச்சில் 'பி. வி ஸி' யும், மற்றும் உயர்ரக ரசாயன சேர்மானங்களும் கலக்கப்பட்டு இருக்கின்றன. துணியின் மென்மையைச் சிறிதும் பாதிக்காதவண்ணம் இச் சாயப்பூச்சை துணியில் புகுத்தும் ஒரு நுட்பமான முறையையும் இக்கம்பனியார் உருவாக்கியிருக்கின்றனர்,

இப்பூச்சுப் பெற்ற துணியில் ஒருவித பளபளப்பு ஏற்படுவதுடன், மேற்குறிப்பிட்ட விசேஷ தன்மைகளும் பெற்றுவிடுகிறது.

பட்டுப்போன்ற மிகமென்மையான துணிகளைத் தவிர்த்து, வேறெவ்வகைத்துணிகளையும் இவ்வகையில் பூச்சிடலாம். ஆனுல் பருத்தித் துணிக்குப் பூச்சிடுவதே மிகச் சிறந்ததென இக்கம்பனியார் கருதுகின்றனர். சமீபத்தில் வலை போன்ற துணிக்கு பூச்சிட்டுத் தரும்படி இக் கம்பனியாருக்குப் பெரிய கோரிக்கையொன்று கிடைத்திருக்கிறது.

அழகுச் சுவர் விரிப்புகளுக்கும் ஸின்ஸ்கின் பூச்சிடுதல் நல்லது. இப் பூச்சிடுவதால் இத்தகைய சுவர் விரிப்புகள் நீர்பட்டும் கிழிந்துவிடாத தன்மை பெறுகின்றன. இக் கம்பனி பூச்சிடப்பட்ட பலவகைத் துணிகளை இன்று உற்பத்தி செய்கிறது.

மழைக்கவச உடை தயாரிப்பவர்களிடையேஇப்பூச்சு பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இப்பூச்சு இடப்பட்டதுணியை மேஜைவிரிப்புகள், அழகுத்திரைகள் பொம்மைகள், புத்தகஉறைகள், பைகள், தோட்ட நாற்காலிகள் ஆகியவற்றிற்கும் பாவிக்கலாம். ஸின்ஸ்கின் கம்பனியின் பூச்சிடப்பட்ட துணிகள் நல்ல வேலைப்பாடுடையவை.

கூடாரங்கள், கைப்பைகள் நிலவிரிப்புகள், காற்றாதிப் பெரிதாக்கப்படும் உயிர்காப்புப் படகுகள் ஆதியனவும் இன்று ஸின்ஸ்கின் பூச்சிடப்பட்ட துணியினுற்தான்செய்யப்படுகின்றன.

பூச்சிடப்பட்ட துணி, நாளாந்த பாவிப்புக்குவிரும்பப்பட்டு, சலவை செய்யும் செலவுகளையும், வெளிமேலாடைகள் செய்யும் செலவையும் முற்ருக நீக்கிவிடும் காலம் வெகு தூரத்திலில்லை என்று ஸின்ஸ்கின் கம்பனியார் கருதுகின்றனர்.

## யுவதியின் சாதனை

மிஸ் நுமாடா என்ற இருபது வயதுள்ள ஜப்பானிய யுவதி ஒரு விமானத்தில் 52மணி 4 நிமிட நேரத்தில் உலகத்தைச் சுற்றிவிட்டு டோக்கியோ திரும்பியிருக்கிருள். இந்த உலகப் பிரயாணத்தில் ஸான்பிரான்ஸிஸ்கோ நியூயோர்க், லண்டன், பாரிஸ், ரோம், டெக்ரான், கெய்ரோ, டில்லி, பாங்கொக், ஹொங்கொங் ஆகிய முக்கிய தலைநகரங்களிலெல்லாம் அவள் இறங்கிஞள். இதற்குமுன் உலகைச் சுற்றிய ஒரு ஜப்பானிய இளைஞனுக்கு 59மணி 40 நிமிடம் பிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய 'நாடகங்கள்' நாடகங்களா?

# தமிழ் நாடகங்களுக்கு சம்பிரதாயம் இல்லையா?

பிரச்னையை கிளப்புகிறார்:

## கலைமணி எஸ். வடிவேலு

"தமிழறிவும், கர்நாடக சங்கீத ஞானமும் கொண்டவர்களே அக்காலத்தில் நாடக நடிகர்களாக விளங்கினார்கள்."

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்தது தமிழ் என்று எம் முன்னவர்கள் மொழிந்துள்ளனர். அத்தமிழில் ஒன்று நாடகத் தமிழ். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதானது எங்கும் காணோம் என்று பாரதியார் பாடியுள்ளார். அந்த நிலையில் பார்க்கும்பொழுது எமது தமிழ் உலக மொழிகளில் பழமையானதும் சிறப்புடையது என்றும் கருதப்படுகின்றது. அத்தமிழில் ஒன்று நாடகத் தமிழ். சைவமும், தமிழும் உயிரும் உடலும் போன்று இணைந்தது என்று பெரியார்கள் கூறுகின்றார்கள். அந்த நிலையில் நாம் வணங்கும் தெய்வங்களாகிய கணபதி குமரியைக் கிழவியாக்கித் தமிழ் பாடவைத்தார். சிவன் ஆடுகின்றார். கூத்து அம்பலத்தில் காளி ஆடுகின்றாள். சரஸ்வதி வீணை மீட்டுகின்றாள், நாரதர் பாடுகின்றார், நந்தி மத்தளம் கொட்டுகின்றார் அருணகிரிக்கு முதலடி எடுத்துக் கொடுத்து திருப்புகழ் பாடவைத்தார் முருகன். இப்படி இன்னும் பல புராண வரலாறுகள் கூறுகின்றது.

நாம் வணங்கும் தெய்வங்களே இசைத்து, நடித்து, படித்து, ரசித்து மகிழ்ந்த கலைகளே நமது தமிழ் கலைகள். இக்கலைகளுக்கெல்லாம் ஓர் சம்பிரதாயம், சாஸ்திரீயம், வரன்முறை உண்டு. கர்நாடக சங்கீதக் கச்சேரி என்றால் அதற்கொரு சம்பிரதாயம் உண்டு. பரதநாட்டியமென்றால் அதற்கொரு சாஸ்திரீயம் சம்பிரதாயம் உண்டு. மேளக் கச்சேரி என்றால் அதற்கொரு சம்பிரதாயம் சாஸ்திரீயம் உண்டு. இவைகளுக்கெல்லாம் திட்டவட்டமான ஒரு சாஸ்திரீயம் சம்பிரதாயம் இருக்கும்பொழுது முத்தமிழில் ஒரு தமிழைக் கருவாகக் கொண்ட நாடகக்கலைக்கு ஒரு திட்டவட்டமான சாஸ்திரீயம் சம்பிரதாயம் இல்லையா?

நாடகக்கலைக்கும், சாஸ்திரீயம் சம்பிரதாயம் உண்டு

அக்காலத்தில் நாடகக் கலையை முறைப்படி திறமையாக நடாத்திவந்தவர்கள்எல்லாம் கர்நாடக சங்கீதமும் தமிழறிவும்கொண்ட மகாவித்துவான்களே. மற்றவர்கள் எவரும் நாடகக் கலையைத் தொழிலாகக் கொண்டுநடிக்கவில்லை. நாடகக்கலை சிறப்புடன் வளர்ந்துவந்ததும் தொழில் நடிகர்களால்தான் அக்காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த மகாவித்துவான்கள் எம். ஆர். கோவிந்தசாமி, எஸ். சி. கிட்டப்பா, சுப்பையா பாகவதர், வீ வி. ரெங்காச்சாரி பாப்புச்சாமி, செந்தில்வேல் தேசிகர், வேல் நாயக்கர், கே. பி. சுந்தராம்பாள், மீனலோசனி, அரங்கநாயகி போன்றவர்கள் எல்லாம் இலங்கைக்கு வந்து இலங்கையைச் சேர்ந்த யாழ்ப்பாணம் புத்துவாட்டியர் சுப்பையா, நாகலிங்கம், ராசா இரத்தினம் சகோதரர்கள், இணுவில் அண்ணாவியார் சுப்பையா நாகலிங்கம் சகோதரர்களுடன் சேர்ந்து பலநூறுநாடகங்களை நடாத்தி நாடகக் கலையைச் சிறப்படையச் செய்தார்கள். இவர்களை அடுத்து நெல்லியடி கிருஷ்ணாள்வார், பொன்னாலை கிருஷ்ணர், கொக்குவில் நவசிவாயம், எஸ்.கே. செல்லையாபிள்ளை, கரையூர் சின்னத்துரை இவர்களும் முறைப்படி சம்பிரதாயபூர்வமாக நாடகக் கலையைத் தொழிலாகக்கொண்டு நடித்து நாடகக் கலையையும் வளர்த்துவந்தார்கள். இவர்களுக்குப்பின் யாழ்ப்பாணம் தையல்நாயகி அச்சகமுன்னைநாள் அதிப* கே. சரவணமுத்து அவர்கள் 'சாந்தி நிலையம்'' என்றபெயரில் ஒரு நாடகப் பாடசாலை வைத்து நடாத்தினார். அதில் ஐம்பதுக்கு மேற்பட்ட நடிகர்கள் சேர்ந்து திறமையுடன் நாடகக்கலையைப் பயின்று இலங்கையின் பல பாகங்களிலும் ஆயிரக்கணக்கான நாடகங்களை நடாத்திப்புகழ்பெற்றார்கள் இவர்கள் காலத்துடன் அண்ணாவி பரம்பரையும் உண்மையான நாடகக்கலையும் அழிந்தது.

இன்று சம்பிரதாய பூர்வமாக உண்மையான நாடகக் கலையைச்செய்து வருபவர்கள் காங்கேசன்துறை வீ வீ. வைரமுத்து குழுவினர். பெரியவிளான் சீரீ செல்வராசா குழுவினர் ஆகிய இரு குழுவினருமேஉண்மையான நாடகக் கலையைச் செய்து வருகிறார்கள். மற்றைய நாடகங்கள் எல்லாம் நாடகம் அல்ல. அதற்கு வேண்டுமானால் வேறு பெயர் வைக்க வேண்டும்.

### உண்மையான சம்பிரதாய நாடகம்

ஒவ்வொரு நடிகரும் கர்நாடக சங்கீதம் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். யாரும் எழுதாத பாடலை, யாரும் சொல்லிக் கொடுக்காத வசனத்தை சொந்தக் கற்பனையோடு தான்தாங்கிய வேடத்துக்கும், அந்தக்காட்சிக்கும் அமைய பாடிப்பேசி நடிக்கவேண்டும். பக்கவாத்தியங்களாக ஆர்மோனியம் மிருதங்கம்இருக்கவேண்டும். மேடையில் பக்கவாத்தியத்துடன் பக்கப்பாட்டுப்பாடும் ஒருவரும் வேண்டும். நாடகத்தில் தர்க்கப்பாட்டுகள் இராகமாளிகையாகவயலின் நியாசங்களுடன் இருக்க வேண்டும். சந்தம், சரபம், பாடவேண்டும். இப்படியான நாடகங்களுக்கு, பபூன்' மிகப் பிரதானம். இதுவே உண்மையான் நாடகக்கலை. இப்படியான நாடகங்களில் தான் நாடகச் சிறப்பைக் காணமுடியும்; ஒவ்வொரு நடிகர்களினதும் திறமையைக்காணமுடியும் சொந்த திறமையற்ற நடிகர்களைஎப்படி ஒரு நடிகர் என்று கூற முடியும். இன்றைய நாடகங்களை, நாடகங்கள் என்று கூறமுடியாது. அதைவேண்டுமானால் அபிநய சம்பாஷணை என்று வேண்டுமானால் அழைக்கலாம். ஒருவர்கதை எழுத ஒருவர் வசனம்எழுத ஒருவர் பாட்டுஎழுத, ஒருவர் இசை அமைக்க, ஒருவர் பின்னணிபாட. ஒருவர்நடிப்புச் சொல்லிக் கொடுக்க' மேடையில் வசனம் மறந்துவிட்டால் சொல்லிக் கொடுக்க இருவர், இப்படிப் பல பேருடைய உதவியுடன் ஒரு நடிகர் மேடைக்கு வந்தால் இவரிடம் என்ன திறமை இருக்கின்றது. சொந்தத் திறமை அற்றவர் எப்படி ஒரு நடிகர்என்று கூற முடியும். இப்படியான நடிகர்கள் வெறும் சம்பாஷணை மட்டும் மேடையில் செய்து கொண்டு அதை நாடகம் என்று எப்படிச்சொல்லமுடியும். இவர்கள்தான் திடீர் நடிகர்கள். தங்களுக்குத்தாங்களே பட்டமும் கட்டிக் கொள்வார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

# தயாராகும் படங்கள்

### கே. எஸ் ஜியின் தபால்காரன்

தபால்காரன், குஷ்டரோகி, குருடன் ஆகிய பாத்திரங்கள் செய்யும் உன்னத தியாகங்களை வைத்து ஓர் உணர்ச்சிமயமான படம் உருவாக்குகிறார் கே. எஸ் ஜி.

தபால்காரனாக காதல்மன்னன் ஜெமினிகணேசனும், குஷ்டரோகியாக மேஜர் சுந்தரராஜனும், குருடனாக முத்துராமனும், தபால்காரனின் தங்கையாக வாணிஸ்ரீயும் நடித்து வருகிறார்கள்.

மற்றும் நாகேஷ், சுந்தரிபாய், நம்பியார் ஆகியோர் நடிக்கும் இப்படத்திற்கான கதை, வசனம் டைரக்ஷனை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்றுள்ளார்.

### நூற்றுக்கு நூறு

'எதிர் நீச்சல்' 'இரு கோடுகள்' ஆகியபடங்களைத் தயாரித்த கலாகேந்திரா ஸ்தாபனத்தார் தங்களது புதிய தயாரிப்புக்கு 'நூற்றுக்கு நூறு' என்று பெயர் சூட்டியுள்ளனர்

ஜெய்சங்கர், நாகேஷ், லட்சுமி ஆகியோர் நடிக்கும் இப்படத்திற்கான கதை-வசனம்- டைரக்ஷன் பொறுப்புக்களை கே. பாலச்சந்தர் ஏற்றுள்ளார்.

### சிவகுமார் லட்சுமி இணைகிறார்கள்

ஜி. என். வேலுமணியின் படமொன்றில் தற்போதைய இளம் சிட்டுக்களான சிவகுமாரும் லட்சுமியும் இணைகிறார்கள்.

சிவகுமார் கதாநாயகனாகவும்லட்சுமி கதாநாயகியாகவும் நடிக்கும்முதல்படம்இது தான். முத்துராமன் மற்றும் பலர் நடிக்கும் இப்படத்தின் கதை- வசன- நெறிப்படுத்துதலை கே. பாலச்சந்தர் ஏற்றுள்ளார்.

### ராஜராஜசோழனாக சிவாஜி

ராஜ ராஜ சோழனாக நடிக்கிறார் சிவாஜிகணேசன்.

தமிழகத்தின் சிறப்புக்களையும், தமிழனின் பெருமைகளையும், தமிழ்கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் படம் உருவாகிறது.

ஏ. பி. நாகராஜனின் வண்ணத்தில் உருவாகும் இப்படத்தை விஜய லட்சுமி பிக்சர்ஸார் தயாரித்து வருகிறார்கள்.

தகவல்:- [illegible]



'சினிமாவிலிருந்து விலகியதும்

# சமையல்காரி ஆகப்போகிறேன்!'

## சௌகார் கூறுகிறார்

"சினிமாத் தொழிலிலிருந்து ஒருநாள்நான் விலகித்தான் ஆகவேண்டும், அப்பொழுது நான் செய்யப் போகும் ஒரு பெரிய உத்தியோகம் என்னதெரியுமா?'' என்று சிரித்துக்கொண்டே தமிழகநடிகை திருமதி சௌகார் ஜானகி கேட்ட கேள்வி என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. ''என்ன?'' என்றேன்- வியப்புடன்! ''சமையல்'' என்றார் ஜானகி.

''சமையல் செய்வது என்றால் கொள்ளை ஆசை. ஏதாவது நல்ல சாப்பாட்டுவகைகள். காரம், சுவிட், கறிப்பாகங்கள்-புதுப்புது தினிசாக செய்கிறேன். ரசத்திலேயே எத்தனையோ வகை தெரியும். சமையலறையைச் சுத்தமாக வைத்திருப்பதிலும். அதிலும், தற்கால நாகரிகமான சமையலறை ஒன்றைக்கட்டி, அதை அழகாக மட்டுமல்ல, சுலபமாகச் சமையல் செய்யக்கூடிய வசதிகளையும் செய்துவைத்திருக்கவேண்டும் என்பதும் பெரிய அவா. நான் இப்போ புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கும் வீட்டில், மேனாட்டு மோஸ்தரிலுள்ள சமையலறை ஒன்றையும் கட்டுகிறேன்'' என்று வாஞ்சையுடன் சொன்னார்.

— செந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தியுறும் நாடுகளின் சமூக பொருளாதார

ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலைபெற்றுச் சுதந்திரமானபொருளாதாரநாடுகள் யாவும் கடந்த 15, 20 ஆண்டுகளிலானகுடிப் பெருக்கத்தை மிகவும் சிரத்தையுடன் நோக்கிவருகின்றன. காலம்சென்ற பாரதப்பிரதமர் நேரு "எம்மால் ஈடுகட்ட முடியாத அளவுக்குப் பெருகுகின்ற குடித்தொகையால் எமது ஐந்தாண்டுத் திட்டங்கள் பொருளற்றுப் போய்விடும்'' என்று கூறினார். 1963ஆம் ஆண்டு ஐ.நா. சபை கணிப்பின்படி குடிப்பெருக்கு விவரங்கள் வருமாறு. 1920-30 காலப் பகுதியில் ஆசியா 11 வீதம்; ஆபிரிக்கா 11.3வீதம்; லத்தீன்அமெரிக்கா19.8 வீதம். 1950-60 காலப்பகுதியில் ஆசியா21.1வீதம்ஆபிரிக்கா 23.3வீதம்; லத்தீன் அமெரிக்கா 27.2 வீதம். இம்மூன்று கண்டங்களிலும் மொத்த அதிகரிப்பு 38-1/2 கோடி. இது மொத்தஉலக அதிகரிப்பில் 80 வீதமாகும்.

தனிப்பட்டசிலநாடுகளின் அதிகரிப்பைப் பத்து இலட்சங்களில் நோக்கினல்:-

இந்தியா: 63.6
பாகிஸ்தான்: 17.2
இந்தோனேசியா: 16.6
பிறேஸில்: 13.8
மெக்சிகோ: 9.2
நைஜீரியா: 5.9
ஐக்கிய அரபுக்குடியரசு: 5.5

ஆசியாவிலும், தூரகிழக்கு நாடுகளிலும் 25வீத மக்கள் பசியால் வாடுகின்றனர். பலர் ஊட்டக்குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றனர் இங்கு ஆண்டுக்கு உணவுற்பத்தி 0.5 வீதம் கூடியது. ஆனல் குடித்தொகையோ 2.4வீதம் கூடியது. எனவே இரண்டாம் உலகப் போருக்கு முன் உணவு ஏற்றுமதி செய்த இந்நாடுகள் இறக்குமதிசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. லத்தீன் அமெரிக்காவில் 1961-64ல் விவசாய உற்பத்தி 1வீதத்துக்கும் குறைவாகவும். குடிப்பெருக்கம் 5 வீதத்துக்கும் மேலாகவும் ஏற்பட்டன. ஐ.நா. உணவு, விவசாய நிறுவன அறிக்கையின்படி, லத்தீன் அமெரிக்கரில் 20கோடியில் 10 கோடிப்பேர் ஊட்டக்குறைவாற் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மிதமிஞ்சிய குடித்தொகை காரணமாகவே, பசி, வறுமை, வேலையின்மை தொற்றுநோய் முதலியன தோன்றுவதாக மோலதஸ் என்ற குடித்தொகைபற்றிய அறிஞர் கூறினர்.

வலிமை, நீடித்த ஆயுள், சுகம், கலாச்சாரம், தேசிய வருமானம், சமூகஒற்றுமை முதலியன ஓர் இலட்சிய குடித்தொகையிற் தங்கியுள்ளன என அல்பிரேட்சோவி, பகோ, ப்ரௌன் போன்ற இலட்சியக் குடித்தொகைக் கோட்பாட்டினர் கூறினர்.

இவர்களது வாதங்களின்படி சமூகவளர்ச்சி, குடித்தொகை விதிகளாலேதானுண்டாகிறது. உற்பத்தியின் இயல்பினை அவர்கள் கவனிக்கவில்லை. எனவே ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் சமூக பொருளாதாரத் துறைகளிற் பின்தங்கியுள்ள நிலைக்கு உண்மையான தீர்வைக் காணமுடியவில்லை.

குடியடர்த்திமிக்க இந்தியாவிலும், குடியடர்த்தி குறைந்த ஆபிரிக்காவிலும் குடித்தொகை மிகுந்த நைல் பள்ளத்தாக்கிலும் குறைந்த அண்மைக் கிழக்கிலும் சமூக பொருளாதார நிலைகள் ஒரே தன்மையனவாக உள.

புவியியல், குடித்தொகை, புள்ளிவிவரங்களில் மாறுபட்ட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பொருளாதார ரீதியாகக் குறைவிருத்தி என்ற பொது தலைப்பில் ஒன்றுபட்டுள்ளன.

பெல்ஜிய ஆட்சியில் 80 ஆண்டுகளில் கொங்கோவின்

காரணிகள் அல்ல, ...
போக்கான சமூ...
பொருளாதார வள...
களின் விளைவாகும். ...
பத்தியத்தின் பலத்த...
கம் இவற்றை விவ...
பொருள்களையும், ...
பொருள்களையும், ...
பொருள்களையும், ஏற்...
செய்வனவாயும், ...
தொழிற் பொருட்...
சந்தைகளாயும் மாற்...

[—எஸ். எம். ஜே. பைஸ்தீன் பி. ஏ,—

குடித்தொகை பாதிக்குமேல் குறைந்தும், கொங்கோ வாசிகளது வாழ்க்கை நிலை முன்னேறமுடியவில்லை.

இவை ஏன் என வினவினல் அக்கேள்விகளுக்குக் குடித்தொகைக் கோட்பாடுகள் விடைதர மாட்டா. ஏனெனில் இவற்றுக்குக் காரணம் குடித்தொகைக்

ளது. ஏகாதிபத்திய...
கள் இவற்றின் கை...
ழில் விருத்திக்கு எ...
முயற்சியும் எடுக்க...
உள்நாட்டு இயற்கை...
வளங்களாலும், மனித...
களாலும் தாம் ந...
பெறக்கூடிய வகையி...
உற்பத்தி[illegible]துறைகள்...
த்தனர்.

## தித்திப்பு

### விஞ்ஞானம்

விஞ்ஞானம், மனிதத்தன்மையானதோர் உணர்ச்சியை ஊட்டவல்லது. இயற்கையை விளக்கிச் சித்திரிக்கும்பணியில் ஈடுபடும் அறிவுக்கலை, அழகுக்கலை இவை இரண்டின் சீரான சேர்க்கையே விஞ்ஞானம். எனவே, கலைச்சிருஷ்டிகளில் விஞ்ஞானம் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. உயிருள்ளதும் வளர்ந்துகொண்டேயிருப்பதுமான மனித உள்ளத்தைச் சித்திரிக்கும் விஞ்ஞானத்தின் உண்மை இயல்பை விஞ்ஞானத் தத்துவங்களுக்குப் பெயரிடும் மரபு நன்கு அறிவுறுத்துகிறது.

—சேர் சி. வி. ராமன்.

### ஏரியும் சமுதாயமும்

ஏரிகளில் தண்ணீர் தேங்குகிறது தேங்கிய நண்ணீரைக் கால்கள் வழி கழனிகளுக்குப்பாய்ச்சிப் பயிரை வளர்த்து அவ்வழி மனிதனை வளர்த்துப் பயனடைந்தாலேயே ஏரிக்குப் பயனுண்டு. பின்னை அந்த ஏரியைப் பாதுகாக்க மனிதகுலம் நிற்கும். அதுபோலவே சமய நிறுவனங்கள் ஏரிகள். அங்கே தேங்கும் செல்வம், தொண்டு என்ற கால்கள் வழி மனித சமுதாயத்திற்குப் பயன்பட்டு மனித சமுதாயம் வளர்ந்து அந்த சமுதாயம் சமய நிறுவனத்தைக்காக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

—குன்றக்குடி அடிகளார்.

### அங்கும் தீபாவளி

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் மூனிச் நகரில் "அக்டோபர் விழா'' பிரசித்தி பெற்றது. பீர் பானத்திற்குப் புகழ்பெற்ற பவேரியா மாநிலத்தின் தலைநகரான மூனுச் நகரில் இந்த ஆண்டு "அக்டோபர் விழா''வின்போது 40 லட்சம் பீர் தண்ணீராகப் பாய்ந்தது. 4 லட்சம் கோழிகள் சுவையான இறைச்சியாக வறுத்தெடுக்கப்பட்டு பீர் பானத்துடன் உள்ளே தள்ளப்பட்டன. 16 நாட்களாக நடந்த இந்த விழாவை 50 லட்சம் மக்கள் கண்டு களித்தனர். ஆண்களும், பெண்களும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். (யூ.பி.எஸ்)

### தேசம்

குறித்த காலத்தில் ஒரு தேசத்தின் கதி அதன் மக்களில் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்களின் கருத்துக்களைப் பொறுத்தது.

—கதே.

### கடிதம்

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களைக் கண்டு உரையாடி மகிழ்ந்து திரும்பிய மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளையவர்கள், தேசிகருக்கு எழுதிய கடிதம்:

சூர்வந்து வணங்கு மேன்மைச்
சுப்பிரமணிய தேவே
நேர்வந்து நின்னைக்கண்டு
நேற்றிராத்திரியே மீண்டு என்
ஊர்வந்து சேர்ந்தேன் என்றன்
உளம் வந்து சேரக்காணேன்
ஆர்வந்து சொலினும் கேளேன்
அதனையிங்கு அனுப்புவீரே.

### உறவுக்குப் பரிசுபெற்றவர்

சில மாதங்களுக்கு முன்பு ஆண்-பெண் உறவு பற்றி படங்களுடன் விவரிக்கும் சிறுவர்க்கான புத்தகம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டு பெரும் புரட்சியை விளைவித்த 62 வயதான கேட்ஸ்ட்ரோபெல் என்ற பெண்மணி மேற்கு ஜெர்மன் மந்திரி சபையில் சுகாதார அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். ''பெரியவர்களின் விவகாரத்தை''சிறுவரும் அறிந்துகொள்ளச்செய்த இந்த அம்மையார் ஆண்-பெண் உறவு விளக்கத்திரைப்படம் ஒன்றுக்கு வசனம் எழுதித் தயாரிப்புக்கும் ஆலோசனை கூறி வெளியிடச் செய்தார். இதன்மூலம் பரிசும் பெற்றார்; புகழும் பெற்றார் அவர்.

— தொகுப்பு: தேன்.

# திருவாசகமா சிவபுராணம

## மணிப்புறவம்

மாணிக்கவாசகர் பாடியது திருவாசகமா சிவபுராணமா என்று கேட்டால் 'இது என்ன கேள்வி, திருவாசகத்துடனே சேர்ந்தது தானே சிவபுராணம்' என்று நீங்களும் அதற்கு மறு கேள்வி போடுவீர்கள். ஆனல் ஊரெழு எஸ். சண்முகநாதன் இதே கேள்வியை முன்வைத்து திருவாசகத்தின் இயற்பெயர் எதுவாக இருந்திருக்கும் என்பது பற்றி சிறியதாக ஓர் ஆய்வுரை எழுதி அனுப்பியிருக்கிறார். கட்டுரையில் அவர் கூறுவதைப் படித்துத்தான் பாருங்களேன்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நான்கு சைவப்பெரியார்களையும் நால்வர் என்று விதந்து கூறுவது தமிழர் மரபு. இந் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகரது அருட்பாடல்களே திருவாசகம். தலைசிறந்த சைவப் பெரு நூல்கள் சில பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் திருவாசகமானது எட்டாவது திருமுறையாகும்.

இந்தத் திருவாசகம் என்னும் நூலுக்கு இதனை எழுதிய மணிவாசகர் இட்ட இயற்பெயர் என்ன என்பதுதான் இங்கு ஆராய்ச்சிக்குரியது. ஒரு குழந்தையானது பிறந்தவுடனே அக் குழந்தையின் பெற்றோர்கள் அக்குழந்தைக்கு இடும் பெயர் இயற் பெயராகும். பின்னர் வளர்ந்து பெரியவரானதும் அக் குழந்தைக்கு எத்தனையோ பட்டப்பெயர்களும் சிறப்புப் பெயர்களும் சூட்டப்படுகின்றன. அதுபோலவே சில நூல்களுக்கும் ஆசிரியர் வைத்த பெயர் இருக்கப் பின்னல் சில சிறப்புப் பெயர்களும் தோன்றுவது வழக்கம். [illegible] அல்லது காரணப் பெயர் பெற்ற ஒரு நூல் நாளடைவில் தன் இயற்பெயரையும் இழப்பது வழக்கம். மணிவாசகர் எழுதிய இந் நூலும் இந்நிலை எய்தியது என்றே கருதற்பாலது. அதாவது திருவாசகம் என்னும் பெயர் இந்நூலின் இயற்பெயரன்று, பின்னல் அதற்குச் சூட்டப்பட்ட சிறப்புப் பெயரென்றே தோன்றுகிறது.

திருமூலர் தாம்செய்த நூலுக்கு மூவாயிரம் தமிழ் எனப் பெயரிட்டுள்ளார். இதனை அவரே கூறியுள்ள 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்ற பாடலினல் அறியலாகும். இந் நூலில் மூவாயிரம் பாடல்கள் உள்ளதால் இந்நூலுக்கு 'மூவாயிரம் தமிழ்' என்று பெயரிட்டார் ஆசிரியர். ஆனல் இந்த இயற்பெயர் நாளடைவில் மறைந்து திருமந்திரம் என்ற சிறப்புப்பெயரே நிலைபெற்றது.

கம்பர் தமது நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயர் வைத்தார். இதனை அவர் பாடிய 'பேர்த்தெடை நிரம்பிய' என்ற பாடற்பகுதியால் அறியலாம் சேக்கிழார் தமது நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்றே பெயர் வைத்தார். இதனை அவர் பாடிய 'இங்கிதம் நாமம் கூறின் ……… திருத்தொண்டர் புராணம்' என்னும் பாடற்பகுதியால் அறியலாம். எனவே கம்பரிட்ட இராமாவதாரம் என்னும் பெயர் மறைய இராமாயணம் என்னும் பெயரே நிலைத்துவிட்டதைப்போல் சேக்கிழார் இட்ட திருத்தொண்டர் புராணம் என்னும் பெயர் வழக்கம் குறைந்து பெரியபுராணம் என்னும் மறுபெயர் வழங்கி வருவதைப்போல திருவாசகத்தி[illegible] ஆசிரியர் இட்ட சிவபுராணம் என்ற இயற்பெயர் மறைந்து திருவாசகம் என்னும் பெயர் நிலைத்திருக்கலாம்.

அன்றுதொட்டு இன்றுவரை இறைவன் திருபுகழ் பாடுவோர் முதலில்கடவுள் வணக்கம் எழுதிதாம் எழுதப்போகும் நூல் இன்னது என்றும் அதனை எழுதும் தகுதி அவையடக்கமும் கூறுவர். இந்நூலைப் படிப்பதால் உண்டாகும் பயன் முதலியவற்றை எழுதிவிட்டே நூலின் உட்பொருளில் புகுவர். இதை முன்னுரை அல்லது பாயிரம் என்றும் கூறலாம்.

சிவன் அவன்என் சிந்தையுள்
நின்ற வதனல்
அவன் அருளாலே
அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச்
சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுது மோய
… … …
பொல்லா வினையேன்
புகழுமாறு ஒன்றறியேன்
… … …
சொல்லிய பாட்டின்
பொருளுணர்ந்து
சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தில்
உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப்
பணிந்து.

மேற்கூறிய அடிகளிலிருந்து ஆசிரியர் தம் முழுநூலுக்கும் சிவபுராணம் எனப் பெயரிட்டுள்ளார். தம் சிந்தை மகிழவும் பழவினை மாயவும் சிவபுராணம் உரைக்கிறர் மணிவாசகர். இறைவனது பெருஞ்சிறப்பைப் புகழும் ஆற்றல் இல்லாதவரென அவையடக்கமும் கூறியுள்ளார். இந் நூலைப் படிப்பவர்கள் வீட்டுலகில் பலரும் புகழும்படி வீற்றிருப்பார் என்று நூற்பயனும் கூறியுள்ளார்.

திருமூலர் தமது நூலில் நூற்பயன் செப்புங்கால் காலையில் எழுந்து மூவாயிரம் தமிழ் என்னும் நூலை பொருளுணர்ந்து கற்பவர்கள் இறைவனை அடைவர் என்றுகூறியுள்ளார். ...லியபாட்டின் ...ளுணர்ந்து ...வார் செல்வர். சிவ...னுள்ளார் சிவனடிக்கீ... லோரும் ஏத்தப் ப... என்று நூற்பயன் கூ...டிடுப்பதை நோக்கின் ...வாசகத்தின் இயற்... சிவபுராணம் என்றே... ளற்பாலது.

### பிரிவாற்றுமை

ஆண் விலங்கு இற... பெண் உடனே உ... ...த்தை வியத்தகு செ... இலக்கியங்களில் கா...

ஓர் ஆண்குரங்கு ...து. பெண்மந்தி இப்... பிரிவை ஆற்றுதா... கைம்மைத் துன்பத்... வெறுத்தது. அதற்... ஒரு குட்டியிருந்தது ... குட்டி மரமேறுதல் ... வற்றையுங் கற்க... அதனையுங் கருதாது ... றத்திடம் அக்குட்... சேர்த்து, மலைமே... கீழே பாய்ந்து உ... டது அம்மந்தி, ... குறுந்தொகை செ... ஒன்று கூறுகிறது.

கருங் கட்டாக்கலை ...
பெரும் பிறிதுற்...
கைம்மை உய்யாக்
காமர் மாதி
கல்லா வன்புறம்
கிளைமுதற் சேர்த்...
ஓங்குவரை அடுக்கத்...
பாய்ந்துயிர் செடு...
சாரல் நாட நடுநாள்...
வாரல் வாழியோ
வருந்துதும் யாமே...
மாந்தரிடையே ...

இறக்க அவன் ... உடன் உயிர்விடும் ... முக்கத்தை 'சதி' ... சககமனம்' என்றும் ... அப்பெண்ணை '... அதாவது தெய்வம்... அவர்பொருட்டுக் ...டியும் பிறவாறும் ... வழிபட்டனர். உடன்... ஏறுதலை பெண்டிர்... மையாகவே ... கள். அதனை வி...

# ன் குடிப்பெருக்கமும் ாரப் பிரச்னைகளும்

ணிகள் அல்ல, பிற் க்கான சமுதாய, ளாதார வளர்ச்சி விளைவாகும். ஏகாதி யத்தின் பலத்த ஆதிக் இவற்றை விவசாயப் டுள்களையும், கனிப் ருள்களையும், மூலப் ருள்களையும், ஏற்றுமதி வனவாயும், கைத் ழிற் பொருட்களின் தகளையும் மாற்றியுள்

தின் பி. ஏ,—]

ஏகாதிபத்திய வாதி இவற்றின் கைத்தொ விருத்திக்கு எவ்வித சியும் எடுக்கவில்லை. ாட்டு இயற்கை மூல களாலும், மனிதவளங் லும் தாம் நன்மை க்கூடிய வகையிலேயே த்தி துறைகள் அமை ர்.

சிற்றுடமை விவசாயந் தேக்க நிலையிலிருந்தது. வெளிநாட்டு முதலீடுகள் பெருந் தோட்டச் செய்கையிலும், சுரங்கமறுத்தலிலும் பாய்ந்தன. விவசாயிகள் நிலப்பற்றுக் குறையால் வாடிய வேளையில் பயிரிடக் கூடிய நிலம் வெறுமனே கிடந்தது. உணவு போதவில்லை. ஆனுல் விளைச்சல் குறைவாகவே இருந்தது. இந்தியாவில் கிராமவாசிகளில் 2|3 பேர் குத்தகைக்காரரும், கூலி விவசாயிகளுமாவர். நிலம் படைத்தோரிலும், பாதிப் பேருடைய உடமைகள் 2 1/2 ஏக்கருக்கும் குறைந்தவை. இந்தோனேசியாவில் முழுநாட்டிலும் 9 வித நிலமே பயிரிடப்பட்டது. 40வீத உடமையாளர் 2 1/2 ஏக்கருக்குக் குறைந்த காணிகளையே வைத்திருந்தனர். அங்கு ஜாவாவில் மட்டுமே அதிகமான விவசாய நிலங்கள் காணப்பட்டன. பிற தீவுகளில் முற்ருக இல்லை எனலாம்.

பின்தங்கிய விவசாய நிலை குறைவிருத்தி நாடுகளின் பொதுப்பண்பாகும். ஏனெனில் புராதனகருவிகளும், பழையமுறைகளுமே கையாளப்படுகின்றன. நிதிவசதியின்மையால், நீர்ப்பாய்ச்சவோ, நல்ல விதைகள், பசளைகள், புதிய கருவிகளை வாங்கவோ, நிலங்களை முன்னேற்றவோ முடியாது. குத்தகைமூலம் அதிக வருமானத்தை உழைத்த நிலச்சொந்தக்காரர்கள் தமது நிலத்தை விருத்தி செய்வதில் ஆர்வங் காட்டவில்லை. இந்தியாவில் 30 வீதம் எகிப்தில் 40 வீதம். மொத்த விவசாய உற்பத்தி வாடகையாகச் சென்றுவிடுகிறது.

புராதனப் பண்ணைமுறை முதற் பற்றுமை முதலியவை காணப்படும் சூழலிலேயே குடித்தொகை விவசாய உற்பத்தியை மிஞ்சிவிடும் என்பது மோலதஸ் கூறும் இயற்கைச் சட்டம். விருத்தியுறும் நாடுகளில் பசியும, வறுமையும்தோன்ற அடிப்படையான சமூக, பொருளாதாரத்துறைகளில் பெருமாற்றங்களைஏற்படுத்த வேண்டும் அரசியல் சுதந்திரம் மட்டும் பொருளாதாரத்தை வளம்படுத்த மாட்டாது. ஜப்பானிய போர்ச்சுகல் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட லத்தீன், அமெரிக்கா இன்றும் அதே பிரச்னைகளையே எதிர்நோக்குகிறது. எனவே, வெளிநாட்டு முதலீடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

பிற நாடுகளுடன் பொருளாதார உறவு பூண வேண்டும்.

விவசாயச் சீர்திருத்த மேற்பட வேண்டும். தேசிய கைத்தொழிலை அமைக்க வேண்டும்.

பாரந்தளவில் பொதுக் கல்வியை விரிவுபடுத்த வேண்டும்.

# கலைஞன்

மூலம்: ஒஸ்கார் வைல்டு
தமிழில்: எஸ். எம். எஃப்.

க்ஷணப்பொழுது இன்பம் என்பதன் சாயலை சிலையில் வார்த்திடும் தணியாத ஆசை அவனை ஆட்கொண்டது ஒருநாள் மாலை.

உலகினில் செம்பினைத் தேடிச்சென்ருன் அவன் செம்பில் மட்டுமே அவனுல் தன் கற்பனையை வடிக்க முடியும்.

ஆனுல், உலகின் செம்பெலாம் மாயமாய் மறைந்து விட்டது. சாஷ்வத துயரம் என்னும் சிலையிலே காணப்பட்ட செம்பைத்தவிர முழு உலகிலுமே வேறு செம்பு அவனுக்குத் தட்டுப்படவில்லை.

தானே தன் கைவண்ணத்தால் வடிவும், வனப்பும் கொடுத்து வாழ்நாளில் தான் காதலித்த ஒரே ஜீவனின் சமாதிமீது அவன் வைத்திட்ட சிலைதான் அச்சிலை. மனிதனது நித்திய காதலின் சின்னமாக மனிதனது நிலையான சோகத்தின் சின்னமாக சிரஞ்சீவியாய் நிலைக்கட்டுமென, எல்லாவற்றையும்விட மேலாகத் தான் நேசித்த அவ்விறந்துபோன ஜீவனின் சமாதிமேல், அவன் நிறுத்திய சிலை அது. அச்சிலையில் அல்லாது முழு உலகிலுமே வேறு செம்பு இல்லாது போய்விட்டது.

எனவே அவன்தான் உருவடித்த அச்சிலையை எடுத்துஉலைவாய் தீயில் வைத்தான்.

சாஷ்வத துயரம் என்ற சிலையின் செம்பிலிருந்து க்ஷணப்பொழுது இன்பம் என்ற சிலையை அவன் வடித்து முடித்தான்.

கூறியுள்ளார். சொல் ாட்டின் பொரு ர்ந்து சொல்லு செல்வர். சிவபுரத்தி ார் சிவனடிக்கீழ் பல் ம் ஏத்தப் பணிந்து'' நூற்பயன் கூறப்பட் பதை நோக்கின் திரு த்தின் இயற்பெயர் ராணம் என்றுகொள் ாலது.

ாற்ருமை

ன் விலங்கு இறந்ததும் உடனே உயிர்நீத்

ணமா?

வியத்தகு செயலாக கியங்களில் காணலாம். ஆண்குரங்கு இறந் பெண்மந்தி இப்பெரும் வ ஆற்ருதாயிற்று. மைத் துன்பத்தை அது த்தது. அதற்கு ஒரே குட்டியிருந்தது அக் மரமேறுதல் முதலிய றயுங் கற்கவில்லை. னயுங் கருதாது தன்சுற் டம் அக்குட்டியைச் த்து, மலைமேலிருந்து பாய்ந்து உயிர் விட் அம்மந்தி, இதனைக் தொகை செய்யுள் கூறுகிறது.

கட்டாக்கலை ரும் பிறிதுற்றெனக் மை உய்யாக் மர் மாதி ா வன்புறம் முதற் சேர்த்தி வரை அடுக்கத்துப் ய்ந்துயிர் செடுக்கும் ல் நாட நடுநாள் ல் வாழியோ ந்துதும் யாமே.

ந்தரிடையே துணைவன் க அவன் துணைவி ன் உயிர்விடும் இவ்வொ த்தை 'சதி' என்றும், மனங்' என்றும் கூறினர். பெண்ணை 'மாசத்தி' வது தெய்வம் என்று பொருட்டுக் கல்நாட் பிறவாறும் வணங்கி ட்டனர். உடன்கட்டை லை பெண்டிர் பெரு ாகவே கொண்டார் அதனை விலக்குதல் அறிவுடையோர் செயலாகவுமிருந்தது. விலக்குபவர் மாசத்திகளால் வெறுக்கப் பெற்றனர் என்பதையும் அறியவேண்டும். சககமனம் மாந்தரிடத்தேகூட வியத்தகு செயலாகவே கருதப் பெற்றது அக்காலத்தில்.

கோவலன் இறந்த செய்தி கேட்டு மாதவி மனம்புழுங்கிஞள். அதுசமயம் காதலனை இழந்தோர் நிலையை மாதவி வசந்தமாலையிடம் கூறுவாள்:

''காதலன் உற்ற
கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா
உயிரொடு நின்றேன்
காதலர் இறப்பின்
கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின்
உயிர்த்தகத்தடங்காது
இன்னுயிர் ஈவர்;
ஈயாராயின்

## பசுந்துளிர்


நன்னீர்ப் பொய்கையின்
நளிஎரி புகுவர்
நளிஎரி புகாஅராயின்
அன்பரோடு
உடன்உயிர் வாழ்க்கைக்கு
நோற்று உடம்புஅடுவர்''.

என்பதாக மூன்று நிலைகளைக் கூறுகிருள்.


இம்மூன்றனுள், உடன் உயிர்நீத்தல் பாண்டியன் நெடுஞ்செழியனது கோப்பெருந்தேவிபாட்டும், இரண்டாவதாகிய தீப்பாய்தல் பூதப்பாண்டியன் தேவியிடத்தும், பின்னதாகிய கைம்மை நோன்பு நோற்றல் எண்ணிறந்த உலகோர் மாட்டும் காணப்படுவதாம்.

0 0 0

திங்கள் மாலை
வெண்குடையான்
சென்னி செங்கோல்
அதுஓச்சிக்
கங்கை தன்னைப்
புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப்
புணர்ந்தாலும்
புலவா தொழிதல்
கயற்கண்ணுய்
மங்கை மாதர்



சந்திரனில் இறங்கிய சார்ள்ஸ் கொன்ராட் சந்திரனிலிருந்து எடுத்த கல், மண் கொண்ட கலசத்தை ஒரு கையில் வைத்தபடி, மறு கையிலுள்ள புகைப் படக் கருவி மூலம் படம் எடுப்பதையும், அவர் அணிந்துள்ள முகமூடியில் சந்திரனில் இறங்கிய மற்ருெரு அப்பல்லோ-12 வீரரான அலன்பீனின் உருவம் பிரதிபலிப்பதையும் இப்படத்தில் காணலாம்.



இரண்டாவது விண்வெளிப் பயணத்தின் போது சார்ள்ஸ் கொன்ராட், அலென்பீன் ஆகிய விண்வெளி வீரர்களால் அப்பல்லோ 12 லிருந்து பிரிந்து அம்புலித்தரையில் இறக்கப்பட்ட 'சர்வேயர்-3' தான் இது. அவர்கள் பூமிக்குத் திரும்பும்போது நிலாத் தரையிலிருந்த ரெலிவிசன் கமிராவையும், விண்வெளி ஆராய்ச்சிக் கருவிகளையும் மீண்டும்கொண்டு வந்தார்கள்.

விற்பனைக்கு

நன்கு வளர்ந்த ஐஸ் பழக்கன்றுகள் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ஒற்றையடிப்பாதை, தார் ருேட்டு வீதி, இளவாலை.

(விளம்பரம் அல்ல)

அருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி
—(சிலம்பு)

காவேரி கங்கை ஆகியஇரு நதிகளிடத்தும் உரிமை கொண்டாடிய சோழனைப் போல இருபெண்களிடம் அவ்வாறு உறவுரிமை கொண்டாடிய காவிரிநாட்டுக் கோவலனிடத்தும் கண்ணகி மாதவி ஆகிய இருபேரும் தத்தமது நிலைபிறழாப் பெண்டிராய் உண்மையாகவே வாழ்ந்தார்கள், கோவலன் பிரிவாற்ருமையால் கண்ணகி 'மகாசக்தி' தெய்வமாகிவிட, மாதவி துறவுபூண்டு கற்பில் குலையாத பத்தினி என அழியாப் புகழ்பெற்ருள்.

## மலரே! மலரே!!

மலர்களை நாட்டுக்கு அறிகுறியாகப் பயன்படுத்தி வருகிருர்கள். பிரெஞ்சு நாட்டுக்கு அல்லி. கிரீசுக்குக் கருங்குவளை. அயர்லாந்துக்கு ஷாம்ராக் என்னும் மலர். இங்கிலாந்துக்கு ரோஜா, எகிப்துக்கு பொற்ருமரை, ஸ்கொட்லாந்துக்கு நெருஞ்சில், ஸ்பெயினுக்கு மாதுளை, இந்தியாவுக்குமல்லிகை

## 'வெடிங்' என்ற வார்த்தை

'வெடிங்' என்ற வார்த்தை ஆங்கிலோ வாக்ஸன் மொழியில் சத்தியம் என்ற சொல்லைக் குறிக்கிறது. திருமணத்தின்போது மணமக்கள் ஒருவருக்கொருவர் பலவாக்குறுதிகளையும் சத்தியங்களையும் செய்ய வேண்டியிருப்பதால் 'வெடிங்' என்ற பெயர் பிறந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமொழியாக உயர்ந்துள்ள ஆங்கிலம்

ஆங்கிலந்தான் உலகின் ஒரேயொருசர்வதேசமொழி என்று சொன்னால் எவரும் மறுக்கமுடியாது. உலகிலுள்ள முழு ஜனத்தொகையில் ஐந்திலொரு பாகத்தினர் ஆங்கிலமொழியைத் தம் தாய்மொழியாகவோ அல்லது தொடர்புமொழியாகவோ கொண்டிருக்கின்ற ஆபிரிக்காவிலும் இவ்வுண்மை நன்கு புலனாகிறது.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தத்தம் தாய்மொழிகளையே முக்கிய போதனா மொழியாக இப்போது மேற்கொண்டிருந்த போதிலும், ஆங்கில மொழி போதனையையும் அத்தியாகிலத் திட்டத்திற்கான உதவியளிப்பும், ஆங்கில போதனையை விரிவாக்குவதற்குப் பெரிதும் உதவியுள்ளன. ஆங்கில ஆசிரியர்கள் வெகு இலகுவாக உபகாரச் சம்பளங்களையும், நிதியுதவிகளையும் இன்று பெறக்கூடியதாகவிருக்கின்றது. இப்படி எடுத்துக்கொண்ட முயற்சி



படக்குறிப்பு:- உலகின் பல பாகங்களைச் சேர்ந்த ஆங்கில போதனாசிரியர்களுக்கு பிரிட்டிஷ் கவுன்ஸில் அடிக்கடி ஆங்கிலப்பயிற்சி வகுப்புக்களை நடத்திவருகிறது. இங்கே நைஜீரியாவைச் சேர்ந்த ஓர் ஆங்கில ஆசிரியையான திருமதி டி. பலோகன், இங்கிலாந்தைச் சேர்ந்த டுர்ஹாம் சர்வகலாசாலையிலுள்ள மொழி ஆய்வுகூடத்தில் ஒலிப்பதிவு நாடாமூலம் ஆங்கிலம் பயில்வதை இங்கு காணலாம்.

னர்' என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் மற்றைய பிரதான மொழிகளெனக்கருதப்படும் சீன, ரஷ்ய, பிரெஞ்சு, ஸ்பானிய மொழிகள் அவ்வவ் நாட்டு மக்களாலும், அந்நாட்டு மக்கள் குடியேறி வாழும் பிரதேசங்களின் சிறுசிறு பிரிவுகளிலுமே பேசப்பட்டு வருகின்றன. இம் மொழிகளை பலதரப்பட்ட காரணங்களுக்காக கற்போர் தொகையும் மிகக்குறைவென்றே சொல்லலாம்.


ஆங்கிலமொழியைப் பொறுத்தவரையில் அதனைப் பேசுவோரில் அரைப் பங்கினரே அதனைத் தம் தாய் மொழியாகக்கொண்டிருக்கின்றனர். மற்றைய அரைப் பங்கினர் பாவனையிலிருக்கும் பிறமொழியாகவே இதனைக் கருதி, பேசிவருகின்றனர். சுருங்கக்கூறின் 'ஏற்றுமதியான மொழி' என்ற ரீதியில் பார்க்கும் போது' ஆங்கிலம் மற்றெல்லாமொழிகளையும்விட பிரபல்யம் அடைந்துவிட்டது. எனவே சாம்ராஜ்யத்தின் பொது மொழியான ஆங்கிலம் சர்வதேசமொழி என்று கூறினாலும் பொருந்தும்.

சாம்ராஜ்யத்தினுள்ளே நிர்வாகத்துறையில், ராஜதந்திரத்துறையில், உயர் கல்வித்துறையில்- இப்படிப் பற்பல துறைகளில் ஆங்கிலமே முக்கிய தொடர்பு மொழியாக இருந்துவருகிறது. பல மொழிகள் பேசப்படும் நாடுகளில், எல்லா மொழியினரையும் இணைக்கும் அரியதொரு பாலமாக இம்மொழி அமைந்துள்ளது. குறிப்பாக ஆசியாவிலும் வசியமென எண்ணி அதற்கு ஆவன செய்துவருகின்றனர். உலகச்செய்திகளையும், விஞ்ஞானத் தகவல்களையும் உடனுக்குடன் எமக்கெல்லாம் கிடைக்கச் செய்வது ஆங்கில மொழியேயாகும்.

கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்ற சாம்ராஜ்ய கல்வி மகாநாடுகள் ஆங்கில மொழி போதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளதும் ஆங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றின் பலாபலனாக ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் போதிக்கும் நாடுகளில் பணியாற்ற, ஆங்கிலமொழி போதனையில் விசேஷபயிற்சி பெற்று நிபுணத்துவம்பெற ஆசிரியர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் கவுன்சில் கடந்த 20 ஆண்டுகளாக ஆங்கிலப் போதிப்புத் துறையில் முன்னோடியாக இருந்து சேவை செய்துவருகிறது. தொடர்ந்து அதுசாம்ராஜ்ய அரசாங்கங்களுக்கும், சர்வகலாசாலைகளுக்கும் நிபுணர்களை அளித்துதவுவதுடன். வேண்டிய பாடசாலைகளுக்கும், பாடத் திட்டங்கள் அமைப்பதற்கும் போதனாசிரியர்களைக் கொடுத்துதவுகிறது. இக்கவுன்சில் சாம்ராஜ்ய நாடுகளில் 120க்கும் மேலான நூலகங்களைத் திறந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கொழும்பிலும், கண்டியிலும் இரு பிரிட்டிஷ் கவுன்சில் நூலகங்கள் அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே. சாம்ராஜ்ய உபகாரச் சம்பள முறை திட்டமும், சாம்ராஜ்ய ஆங்களின் பலனாக, ஆங்கிலத்தை தொடர்பு மொழியாகக் கொள்வதன் முக்கியத்துவம் புதுமலர்ச்சி பெற்றிருக்கிறது எனக் கூறலாம்.



படக்குறிப்பு:- இலங்கையர் ஒருவர் உட்பட வெளிநாடுகளிலிருந்து ஆறு டாக்டர்கள் சமீபத்தில் இங்கிலாந்திற்கு விஜயம் செய்தனர் பிரபல பிரிட்டிஷ் வைத்திய பொறியியல் நிறுவனமான ''சிமித் அன்ட் நெபியூ'' கம்பனி இவர்களுக்கு உபகார நிதி வழங்கியது. [illegible]யினர், இங்கிலாந்தில் மேற்படி கம்பனியின் வைத்திய [illegible] ஆய்வுகூடம் ஒன்றைப் பார்வையிடுகின்றனர். இடமிருந்து இரண்டாவதாக இலங்கையைச் சேர்ந்த டாக்டர் எஸ். இராமச்சந்திரன் காணப்படுகிறார்.

# மாணவர் மலர்

## யேசு

ஆடுகள் மேய்ப்பவன் - யேசு
ஆயரின் இரட்சகன்
பாடுகள் பட்டவன் - இப்
பாரினை மீட்டவன்.

கேடுகள் ஓடிட - யேசு
கெட்டவை மாய்ந்திட
பாடுகள் பட்டவன் - இப்
பாரினை மீட்டவன்.

—கிரான்ஜீவன்.

## மனிதனை மகானுக்கும் ஏழ்மையும் தாழ்மையும்

எளிமையான வாழ்வை மனிதன் மேற்கொண்டால் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் எள்ளளவும் துன்பமே நேரப்போவதில்லை, மனிதர்களுக்கு ஆடம்பரத்தில்தான் அதிகம் பற்றுள்ளது. எளிமையான வாழ்க்கையை விரும்புகிறவர்களைக்காண்பது அரிதாகிவிட்டது.

கிறிஸ்மஸ் திருநாள் என்றவுடன்மக்கள் மனதில்என்ன உதயமாகிறது. ஒவ்வொருவரும் தங்கள் நெஞ்சில் கைவைத்துசிந்தித்துப்பார்த்தால் உண்மை தெளிவாகும். கிறிஸ்மஸ் பெருநாள்

— வி. இன்னாசிமுத்து —

நெருங்குகிறதே. புத்தாடைக்கென்னசெய்வோம். வரும் விருந்தினர்களை வரவேற்க என்னவித உணவு வகைகள் தயார்செய்வோம்; எந்தரக மதுபானம் வாங்குவோம் என்ற சிந்தனையில் தான் நாம் கிறிஸ்துவின் வருகையையே எதிர்பார்க்கிறோம்.

ஆடையில்லாத ஏழைக்கு உடையளிக்கவும், பட்டினியால் துடிதுடிக்

(11-ம் பக்கம் பார்க்க)

## தெரிந்து சொள்ளுங்கள்

ஒரு பவுண்டு தேன் சேகரிக்க ஒரு தேனீ பறந்து செல்லவேண்டிய மைல்கள் எவ்வளவு தெரியுமா? 3லட்சம் மைல்கள்.

0 0

முதலை சத்தம் எழுப்பும் போது எருது கத்துவது போல் குரல கேட்கிறதாம்.

0 0

எறும்புகள் கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன. 15 ஆண்டுகள்தான் அதன் ஆயுட்காலம்:

0 0

எறும்புக்குக் கண் தெரியாது காதும் கேட்காது. அதன் தலையின் மேல்பாகத்தில் இருக்கும் கொம்பு போன்ற உறுப்பின் மூலம் தான் பொருட்களைப் பார்க்கின்றது. சத்தத்தைக் கேட்கின்றது.

0 0

ஒட்டச்சிவிங்கி ஒருநாளைக்கு 5 பவுண்டுவீதம் உணவு உட்கொள்ளுகிறது.

0 0

ஒரு யானை தொடர்ச்சியாக 49 வருடங்கள் வாழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனை...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் குடும்பங்களுக்கு உணவளிக்கவும், நோயால் துன்பப்படுபவர்களுக்குக்கலவையோ குளிகையோ வாங்கிக் கொடுக்கவும் கிறிஸ்துநாதரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் நாம் திட்டம் தீட்டினோமா?

ஆடம்பரத்தை ஆண்டவன் விரும்புவதில்லை பகட்டினை அவர் பற்றிப்பிடிக்கவுமில்லை. ஆடம்பரத்தையும் பகட்டினையும் இறைவன் விரும்பியிருந்தால் அவர் எதற்காக நட்டநடு நிசியிலே பனிக்குளிரிலே, மாட்டுத்தொழுவத்திலே பிறக்க வேண்டும்.

எப்போதும் நிலைத்திருப்பது எது? ஆடம்பரமும் பகட்டுமல்ல, ஏழ்மையும் தாழ்மையுந்தான் என்பதை நமக்குணர்த்தத்தானே கிறிஸ்துநாதர் மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார்

ஏழ்மையும் தாழ்மையும் நம்மிடம்உண்டாயின், பகட்டும் ஆடம்பரமும் நம்மிடம் துளிகூட இல்லையாயின் கிறிஸ்துநாதரின் வருகைக்கு நம் உள்ளத்தை ஆயத்தம் செய்வோம். ஒவ்வொருவனும் ஓர் ஏழைக்கு உணவும் உடையும் அளிப்பதின்மூலமும் நோயால்வாடுபவர்கள் துன்பத்தை நீக்குவதின்மூலமும். சிறையில் அடைபட்டுக் கிடக்கும் கைதியைசந்திப்பதின்மூலமும் கிறிஸ்து நாதரின்வருகைக்காக உண்மையான ஆயத்தத்தை மேற்கொள்கிறோன்.

# உலகுக்கு ஒளி கொடுக்க வந்துதித்த யேசுபிரான்

—தே. மரியநாயகம்—

வாழ்க்கை என்னும் மலையுச்சியிலிருந்து பிரவையான நீரூற்ருக ஓடிவருவதுதான் 'அன்பு' என்று ஒரு யோகி கூறிப்போந்தார். இந்த அன்பின அடிப்படையிலே அவதரித்த அன்பின் ஊற்றுத்தான் பாலயேசு.

யேசுகிறிஸ்து இறைவன். ஆம், மானிட குலத்திலே அவதரித்தாலும் அவர் கடவுளின் குமாரனே. ஏனெனில் இறைவன், பிதா, சுதன், தூயஆவி (இஸ்பிரீத்துசாந்து என்று மூவராய் பிரிக்கப்பட்டிருக்கின்ருர். இப்பிரிவு மனிதகுலத்தினல் அமைக்கப்பட்டதல்ல, இறைவன் மூன்றுவித உருவங்களாகி மக்களுக்குச் சேவைசெய்யத் தம்மைத் தாமே பிரித்துக் கொண்டார். ஆயினும் மூவரும் ஒரே இறைவனே. அந்த இறைவனின் இரண்டாம் பிரிவாகிய சுதனே நமது யேசுகிறிஸ்துவாம்,

கிறிஸ்துநாதர் உலகுக்கு வெள்ளிவெளிச்சம் கொடுக்கவே உதித்தார். ''நாம் உலகுக்கு ஒளி கொடுக்கவே வந்துள்ளோம்; இருள் கொடுக்கவல்ல'' என்றுஅவர் கூறினர். அத்தகைய அன்பின் பிறப்பிடம் யேசுகிறித்து இற்றைக்கு ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து எட்டு வருடங்கட்கு முன் பெத்தலேகம் நகரிலே மாரிபெய்யும் மார்கழியிலொருநாள் குளிர்நடுங்கும் இரவிலே மாட்டுத் தொழுவத்திலே அவதரித்தார்.

அவர் அன்பை அள்ளி அள்ளிவீச வந்தவராயினும் அவர் பிறக்கும்போது அவரைக் கருவில் தாங்கி நின்ற அவரது திருத்தாயாராகிய மரியாளையும் அவரது பத்தாவாகிய சூசையப்பரையும் அம்மக்கள்இன்முகம் காட்டி வரவேற்கவில்லை, ஒரு சிறு இடமாவதுகொடுக்கவில்லை. இதிலிருந்து தெரிவதென்னவென்ருல் மனிதன் மனிதன்தான், இறைவன் இறைவனதான் என்பதே.

ஆதிமனிதர்களாகிய ஆதாம் ஏவாள், கடவுளின் சட்டளையை மீறிய குற்றத்தினுல் மண்ணில் தோன்றும் ஒவ்வொரு மனிதருக்கும் ஜென்மபாவம் என்ற தோஷம் ஒட்டிக்கொள்கிறது அந்தப்பாவத்தோடுஉழன்ற மனிதன் கன்மபாவங்களாகிய கொலை, கொள்ளை. களவு, பொய் போன்ற இன்னேரன்ன பாவங்கட்கும் தொல்லை துன்பங்கட்கும் ஆளானன். கருணை மிக்க இறைவன், பாவத்திலேயே பிறந்து பாவத்திலேயே வளர்ந்து பாவத்திலேயே அழிந்தொழிந்து கொண்டிருந்த மக்களின்மேல் தமது இரக்கப்பார்வையைச் செலுத்தினுர். ' நாம் உங்களுக்கு ஓர் இரட்சகரை அனுப்புவோம்' என்று வாக்குப்பண்ணினுர்

இறைவன் தானளித்த வாக்குப்படியே தமதுஇரண்டாம் ஆளாகிய சுதனை ஒரு புனிதமான பெண்ணின் வயிற்றிலே கருவாகச் சிருஷ்டித்து மனிதனுக அவதரிக்க வேண்டுமென்று சித்தம் கொண்டார். அதற்கேற்ப அவர் கண்களில் தோன்றிய புனித குடும்பமாகிய யுவக்கீன் அன்னம்மாள் குடும்பத்திலேயே தமக்குத் தாயாக வரப்போகிறமரியாவை அன்னம்மாளின் வயிற்றிலே ஜென்ம பாவமில்லாமல் சிருஷ்டித்தார். அவர்கள் மரியாயைத் தெய்வத்திற்கு

13-ம் பக்கம்பார்க்க)

## நவீன நரி விருத்தம்

''கரவைக்கவி கந்தப்பனுர்''

திருத்தக்க தேவரென்னும் சீருடைப்புலவர் முன்னுள்
நரிக்கொரு விருத்தம்பாடி நயமுற வைத்த ஏட்டைப்
பிரித்துநான் படித்துஓய்நது பேயகளும் உறங்கும்
[யாமம்
விரித்தபாய் அதனில்மெல்ல மென்துயில் கொள்ள
[லுற்றேன்.

நரியது ஊளைகேட்டு நான்திடுக் குற்றெழுந்து
பெரியபொல் லதனைத்தேடிப் பிடித்ததை எடுத்துக்
கையில்
செறியொளி வீசும் மின்னுர் பொறியதும் கொண்டு
[வீட்டின்
புறமதை நோக்கிப்போகப் போந்தஅந் நரிதன்வாயில்

வேறு

என்னரிய மனைவிதன திருகண்ணுக
எண்ணிவளர் ஆட்டினது குட்டியொன்றைத்
தன்பசியைத் தீர்ப்பதற்காய்க் கௌவிக்கொண்டு
தாவஅதைப் பொல்லாலே எறிந்தேன் ஆங்கே
''சின்னமனம் கொண்டமுழு மனிதா'' என்று
சிரித்துநரி எனைப்பார்த்து நகைத்து மெல்ல
''உன்னையுந்தான் எதிர்பார்த்து வந்தேன் சும்மா
உயர்கவிதை படித்ததனுற் பயன்தானென்ன?''

என்றுநரி கூறிடவும் என்னுள்ளத்தே
எழுந்தவியப் படங்கவில்லை நரியார் சொல்வார்
என்றனது இனத்தையெலாம் இழிவு செய்தே
எழுதிவைத்த கதைகளையும் புலவோர் செய்த
நன்றறியாப் பாடலையும் நாமுங் கேட்டோம்
நாட்டிலுள்ள நரிமனிதர் எங்கே பானுர்?
கொன்றெழிக்கப் பொல்லுமில்லை; கோபமில்லை
குட்டிநரி எமைக்கொல்ல வந்தீர் போலும்.

வேறு

நீலநிற வர்ணமுள நீரினில் விழுந்தே
கோலமது மாறியுள குள்ளநரி ஒன்றின்
சாலமது கூறியது தப்பென வுரைக்கும்
சிலர்களின் உண்மைநிலை செப்புவது கேளும்.

கண்டபடி நாம்புழுகக் காக்கையது கேட்டு
சொண்டதனிற் கொண்டவடை தொப்பெனவே
[போட்டு
தொண்டையத னுற்கரையத் தூவென விகழ்ந்தோம்.
என்றுகுறை கூறுபவ ரின்செயல்கள் கேளீர்.

வேறு

கொழுத்த மானை வளைத்துப் பிடித்துக்
கொண்டுபோய் வயல் காட்டியே
விழுத்தி வலையில் மானும் இரக்க
விரத மென்று ஏ மாற்றியே
சுழிப்புச் செய்யும் கெட்ட நரிகள்
தூவென் றிகழும் தமிழரின்
பழிப்புச் செயலைக் கூறக் கேட்டால்
பாரும் நகைக்கும் பண்பதே.

அதிக பசியால் வருந்திக் களைத்த
அண்ணர் ஒருவர் முன்னோர் நாள்
புதுமை யாகச் செழித்து வளர்ந்த
கொடிமுந் திரியின் பழங்கண்டு
குதித்துப் பார்த்தும் எட்டாமையால்
குலைகள் புளிக்கும் என்ருரென்
றிதுவரைக்கும் சிரிக்கும் மாந்தர்
இயல்பு சொல்வேன் கேட்பிரே.

வேறு

சொன்னுல் வெட்கம் தமிழர்க்குள்ள
துர்க்குணஞ் சிறிதாமோ?
சின்னத் தனங்கள் எல்லா மொன்ருய்ச்
சேர்ந்த பெரும் மூட்டை
பென்னம்பெரிய குறள்கண்டவர் நாம்
பெரிதும் பண்புடையோம்
என்னச் சொல்வார் எளியோர்க் கிரங்கார்
எங்குல நரியலரோ?

கன்னித் தமிழெம் அன்னை அவளைக்
கட்டில் ஏற்றிடுவோம்
எம்மைத் தெரிமின் இறுதி வரைக்கும்
இடர் வரினும் காப்போம்
திண்மை உடையோம் திணிதோள் உடையோம்
தீரர் நாமென்று
சொன்ன சூரர் சுகங் கண்டார்கள்
தூ! நரிஇவரிலை யோ?

(அடுத்தவாரம் முடியும்)

புத்தாண்டில் புதுச்செய்தி!
நாட்டவர்க்கு நற் செய்தி !!

ஈழத்து நங்கையர் இதயம் இனிபுற
வாழ்க்கை வலியுற
பணமும் பவுனும் பயனைத் தந்திட

''தம்பி அன் கோ''வில்
பணம் அல்லது பவுண் திட்டத்தில் சேரவும்.

விளக்கம்:

(1) இன்று பவுண் ஒன்றின் விலை ரூபா 140/- ஆனுல்

(2) 5 பவுண் விலை ரூபா (700/-)எழுநூறையும் தம்பி அன் கோ. வில் கொடுத்து பற்றுச்சீட்டு வாங்கவும்.

(3) எந்த நேரத்திலும் 8 நாள் அறிவித்தலில் பணம் அல்லது பவுண் எடுக்கலாம்.

(4) பணமானுல் ரூபா எழுநூறும் வருடம் 10 சதவீத வட்டியும் வாங்கலாம்

(5) பவுணுனுல் 5 பவுணும் வருடம் 8 சத வீத வட்டியும் வாங்கலாம்

(6) ஆகையால் தம்பி அன் கோ.வில் பணமும்,பவுணும் நாட்டவர்க்கு நன்மையை நல்கும்.

மறுவிபரங்கட்கு:

தம்பி அன் கோ.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், வண்ணர்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரூற்று

(சென்றவாரத் தொடர்ச்சி)

சொக்க: என்ன பேச்சு புதிசாக இருக்கு? இந்தமூன்றுக்கும், நமக்கும் வெகு தூரம். அப்படியிருக்க, வாழ்விலேயே அநுபவமில்லாத இதைப்பற்றிக் கேட்கிருயே-அது என்னவென்று நீதான் சொல்லேன்?

முத்து: அது தற்கொலை தான். நேர்மையின்முடிவு-நியாயத்தின்முடிவு-நீதியின்முடிவு-மிகவும் பரிதாபகரமானது. இன்றைய உலகத்தில் இவையெல்லாம் செல்லாக்காசுகள். டேய் சொக்கா உனக்கு கணக்கன் பரமசிவத்தைத் தெரியுமா?

சொக்: நல்லாத்தெரியுமே மானஸ்தன் என்ருல் அவனுக்கு அவன்தான். ஆனல் கொஞ்சம் பயந்தவன். அவனுக்கு?.........

முத்து; அந்தப் பயம்தான் நேற்றிரவுரயிலில் கலையை கொடுத்து அவனைத் தற்கொலை செய்யவைத்து விட்டது. இதைச் சொல்லித் தான் பேப்பர்க்கார மணியம் துக்கப்பட்டான்.

சொக்: பாவிமகன் ஏன் இப்படிச்செய்தான்?

முத்து: மானம் என்கிற மலட்டு வார்த்தைக்குப் பயந்துதான்.

சொக்: அப்படியென்ருல்...

முத்து: வெள்ளை உள்ளத்தில் கறுப்புப் படருவதைத் தாங்கஅவனுல் முடியவில்லை.

[தெய்வானை இவர்களருகில் வந்து பேச்சைமிக உன்னிப்பாகக்கேட்கிருள்.] பரமசிவத்தின் முதலாளி யாருக்கோ கொடுக்கிறதிற்காக இவனிடம் நிறையப் பணத்தைக்கொடுத்து அனுப்பினும். அதை இவன் எங்கோ தொலைச்சுப்போட்டான். முதலாளியோ பணத்தை இவன்தான் எடுத்தான் என்று பழியை இவன்மேல் போட்டு, பணத்தையும் உடனேயே வைஎன்றுநின்ருராம். மானமுள்ளவன், மரியாதையுள்ளவன், பயந்தவன்வேறுஎன்ன செய்வான். பாவம், ரயிலுக்கை தலையை வைச்சு தன் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டான்.

சொக்க: [எழுந்தபடி] இதுவா விஷயம். முத்துஅந்திக்காசை எடுத்தவங்கபாடு இண்டைக்கு மோட்சலோகம்தான்.

தெய்வா: [அவசரமாக] இல்லையப்பா [அருகில்வந்து] நரகலோகத்தை நான் அநுபவிச்சுக்கொண்டு இருக்கிறேனே. பிள்ளையாரே இந்தப் பணத்தாலே நல்ல ஒரு உயிரை பறிச்சுக்கொண்டியே! இது நியாயமா? (பரிதவித்தபடி) இது நியாயமா?

சொக்: அப்ப நீதான்களவெடுத்தியாணை?

தெய்வா: (கோபமாக) பொத்தடாவாயை என்னைப்பார்த்தாகள்ளி என்று சொல்கிருய்? திங்கிறதுக்கு சோறுதான் கிடைக்கலையென்ருலும், பட்டினி கிடந்து சாவேனே ஒழிய, திருடுற புத்தி மட்டும் எனக்கல்ல- என்ர பரம்பரைக்கே கிடையாது. தெரியுமா? பிள்ளையாரேபழிஎன்மேலா?

முத்து: அதனைஎங்களிடம் கொடுத்துவிடு. பழி உன் மேலேவராது.

சொக் (ஆவலுடன்] அதில் எவ்வளவு இருக்கணை?

தெய்வா: யாருக்கப்பா தெரியும்?

முத்து: நீ எண்ணிப்பார்க்கவில்லையோ?

தெய்வா: வைச்சுக் கொள்ளவே மேலெல்லாம் குலப்பன் அடிக்குது. பிறகு எண்ணிப் பார்க்கிறதாவது. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் இந்தக் காசால இன்னேர்உசிர் போவதற்கு முந்தி உரியவங்களிடமே கொடுத்துவிடுவோம்என்ன?

முத்து: என்ன விசர்க் கதையெணை கதைக்கிருய்? இதைத்திருப்பிக் கொடுப்பதினலை செத்துப் போனவன் திரும்பி வந்துவிடப்போகிருனே?

தெய்வா: செத்தவன் வர வேண்டாமப்பா, இருப்பவன் இதனுலை சாகாமலிருந்தால் போதும்.

சொக்: வலியவந்த சீதேவியை உதறப்பார்க்கிருய்?

தெய்வா: இல்லையப்பா இல்லை. இது எனக்கு சீதேவியென்ருல், இதனுல் செத்துப் போனுனே, அவனுக்கும், அவன்ர குடும்பத்துக்கும் இது மூதேவிதான். இதை வைச்சுக்கொள்றதே மகா பாவம்.

முத்து. அப்படியென்ருல் எங்களிடம்கொடு?

தெய்வா: ஏதுக்கு?

முத்து: நாங்களே அவங்களிடம் கொடுத்துவிடுகிருேம்

தெய்வா: நானெப்படிஉங்களை நம்புகிறது?

முத்து: (வஞ்சகமாக) நம்பாதே! ஆனு மரியாதையாக நான் சொல்வதைக்கேள். உன்னிடம் இருக்கும்காசை எண்ணிப்பார்த்து ஆளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொள்வோம்-இல்லை?

தெய்வா: நல்லகதை தான்.

சொக்க: எணேய் ஆச்சி நீ சத்திரத்திண்ணையில ''சொத்திப் பெடியனேடு'' கிடந்தது போதும்.

தெய்வா:'சொத்திப்பெடியன்' ...... சொல்லடா பார்ப்போம்? இன்னெருக்காச் சொல்லு பார்ப்போம்?

சொக்: சொன்னுல் என்ன செய்து போடுவே?

முத்து:(அவசரமாகஇடைமறித்து) டேய்விசராவிசர்க்கதை கதைக்கிருய். பல்லை நொருக்கிப் போடுவேன் பேசாதே.

தெய்வா: அப்படிச் சொல்லுராசா நான்பெத்த பிள்ளை மாதிரி உன்னை நினைச்சு உண்மையாக, சத்தியமாக சொல்கிறேன். கிடந்து எடுத்திட்டோமே என்ருல் அது எங்களுக்குத்தான் சொந்தம் என்று உரிமைகொண்டாடுவது கடவுளுக்கேஅடுக்காது. அதனுல் சொல்லுகிறேன் அதை அவர்களிடமே கொடுத்துவிடுவோம். என்னப்பா?

முத்து: (யோசித்துவிட்டு) உரியவர்களிடமே கொடுக்க வேண்டும் அப்படித்தானே?

தெய்வா: பூரிப்புடன்) ஆமாம் ராசாக்களே! அதுதான் என்ர ஆசை.

முத்து: அதை நிறைவேற்றுவது என்ர கடமை. காசைக்கொண்டு வா. பரமசிவத்தின் வீட்டை நாங்கள் உன்னைக் கூட்டிக் கொண்டு போகிருேம், காசை நீயே அவர்களிடம் கொடுத்துப்போடு என்ன?

தெய்வா:(சந்தோஷமாக) நீங்கள் நல்லாக இருப்பீர்கள். கணபதி உங்களை நல்லாகவைப்பான். இப்பவே வாறன். கொஞ்சம் பொறுங்கள்.

(ராமுவினருகில் போய், அவனதுபோர்வைக்குக்கீழே இருந்த தோற்பையைஎடுத்துக்கொண்டு அவனது தலையைக் கோதியவண்ணம்) கவனமாக இருந்துக்கோ இதைக் கொண்டுபோய்க் கொடுத்திட்டு ஓட்டுக்கிட்டங்கும் போயிற்று மத்தியானத்துக்கு நெய்ச்சோறும் வேண்டிக்கொண்டு நான் வாறன். ''ச்''... (முத்தமிட்டு) இருந்துக்கோ.

(அவன் தலையை ஆட்டுகிருன்)

வாங்க ராசாக்களே.

முத்து: டேய் சொக்கா... தூங்கி மூஞ்சி... வாடா...

(மூவரும் போகின்றனர்)

ராமு: (விம்மியபடி) ''பாவம்'' ... என்ர அம்மா சரியான பாவம்.

(பிள்ளையார் கோவில் முகப்பைப்பார்த்து இரண்டு கரங்களையும் குவித்துக் கொண்டு) பிள்ளையாரே... பிள்ளையாரே... இவளவு வருஷமாக உன்னை நான் பார்த்துக்கொண்டு இருக்கிறேனே நீ எனக்கு என்ன செய்துபோட்டே? கூன் விழுந்த முதுகை நிமித்த முடியாமல் நிமித்தி நின்று கும்பிட்டேனே? குழிவிழுந்த இந்தக் கண்களால் கண்ணீர் ஓடஓட உன்னைப் பார்த்துப் பார்த்து அழுதேனே? அழுதுகொண்டு இருக்கின்றேனே? கணபதி என்ர கடவுளே— [illegible] உருவத்தைப் பார்த்து, நினைவெல்லாம் உன்பெயரைச் சொல்லிச் சொல்லி கனவிலும், நினைவிலும் நீயாக உன்ர எண்ணமாக கத்துகிற என்ர குரல் கேட்கவில்லையா? கணபதியே கேட்கவில்லையா? ஐயோ என்ர மாமா அப்போதை-?

(கைகளினுல் காதுகளைப் பொத்திக்கொள்ளுகிருன். சண்முகத்தின் குரல் பின்னணியில் ஒலிக்கிறது.)

ச. குரல்: நீ ஒருத்தன் இல்லாட்டி அவள் என்ர வீட்டில் என்ன மாதிரியடா இருப்பாள்? மூதேசி நாயே! ஓடுகிற ரயிலில் விழுந்து சாகக்கூடாது? ஒரு முழக் கயிறு கிடையாது?

ராமு: (உடல் நடுங்க உள்ளம்பதற) என்ர மாமா என்னைப் பேசாதேங்கோ... என்னைப் பேசாதேங்கோ...

ச. குரல்: உனக்கு குளம் குட்டை கிணறு தெரியாது? எங்காவது விழுந்து சாகிறதுகானே? ஊருத கிணறும் உசவாத மனிதனும் உலகத்திலை எதுக்கடா?

ராமு (பதறிக்கொண்டு) பிள்ளையரே! மாமா பேசாதேங்கோ-

ச.குரல்; உன்னுல்தான் அவளுக்கு இவளவு கஷ்டமும் தொல்லையும். டேய்... நீ... ''செத்துப்போ - செத்துப்போ''

ராமு: ஐயோ மாமா - (சத்திரத்திண்ணையில் இருந்து நிலத்தில் விழுந்து விடுகிருன்)

என்ர பிள்ளையாரே!

(அரைந்தபடி கோவில் முகப்புக்குச் சென்று படிக்கட்டில் ஏறி அமர்ந்தவாறு)

கணபதி உண்ணுணச் சொல்லுகிறேன் நான் உசிரோடு இருக்கிறதினுலை எல்லாருக்கும் கஷ்டம். இதனுலை எனக்கு உசிரோடு இருக்கவே விருப்பமில்லை. சத்தியமாக, உண்ணுண நான் சாகவேணும். கணபதி, நான் சாகவேணும். (படியில் தலையை முட்டியபடி) என்னைக்கொன்றுபோடு... என்னைச் சாகக்கொல்...

(அப்பொழுதுவந்த கிருஷ்ணஜி, இவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டு அமைதியாக நிற்கிருர்)

வேணும்...நீ... என்னைக் கொல்லவேணும் என்னைக் கொல்ல எனக்குத்தெரியும். மாமா சொன்னுர். அவர் சொன்னவழி எத்தனையோ இருக்கு. நான் போறேன். ஆனு ஒன்றுசொல்லுகிறேன்-என்னைப்போல யாரையும் இப்படிப் படைச்சு, அவங்க விடுகிற கண்ணீரையும் படுகிற கஷ்டத்தையும் கொண்டு, உன்னை நீ விளம்பரப்படுத்தாதே. ஆமாம் சொல்லிப்போட்டன். நான் போறேன், ''ஓ''...சாகப் போறேன். இனி வரவே மாட்டேன். ஆனு நீ இனி மேல் இதிலைதனியாகத்தான் இருப்பாய்...''ஓ' நான் போறேன்...நான்...

கிருஷ்: ராமு...

ராமு: (அதிர்ந்து) சாமியாரே-

கிருஷ்: நீ எங்கே போகிருயப்பா?

ராமு: சாவைத்தேடிப் போறேன்.

கிருஷ்: அது எங்கேயப்பா இருக்கிறது?

ராமு: ஆத்துலை இருக்கு, குளத்திலை இருக்கு, ரயில்த் தண்டவாளத்திலை இருக்கு-

கிருஷ்: ஏனப்பனேஉனக்கு இந்த எண்ணம்?

ராமு: என்ரஅம்மாச்சிக்கு என்னுல்த்தான் கஷ்டம். எல்லாரும் என்னை சாகச் சொல்லுகிருர்கள்.

கிருஷ்: சொல்லமுடிகிற அவர்களால் உன்னைக் கொல்ல முடியவில்லையாமோ?

ராமு: அப்படி அவர்களே செய்துபோட்டால், எவளவு நல்லம் சாமி. சாமி இங்கு அம்மாச்சியோடு ஒவ்வொருவரும் பேசிறதை நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். ஒருத்தன் சொன்னுன் சாமி- ''சலவைக்கல்லுக்கூட தான் தேய்ப்பதற்குஉபயோகமாக இருக்கிறேன் என்று சொன்னுறகூட அதிலை உண்மை இருக்காம். சாமி நான் படுத்திருக்கிறேனே அந்த திண்ணைக்கல்லு. அதுகூட என்னைச் சுமந்துகொண்டு இருக்கிறேன்என்றுசொன்னுலும்அதிலையும்பொய் இல்லையாம்'' என்று சொல்லி, என்னைப் பார்த்து இந்தமனுஷக்கல்லுக்கே, உலகத்திலை எதைச் சொல்ல வாய்ப்பிருக்கு? என்று சொன்னுன் சாமி...நான்...(குமுறி அழுகிருன்)

கிருஷ்: அழாதே ராமு, ராமு இந்த உலகில் நடக்கும் பொய்யான வாழ்வை உதறிவிட்டு, உண்மையோடும், நேர்மையோடும், ஆத்மசுத்தத்தோடும், நிதானமாக வாழ்வதற்கு அவளைத்தூண்டிக் கொண்டிருக்கும், ஒரு தூண்டுகோலாக, நீ இருப்பது எவளவு உண்மையோ, அவளவு உண்மை நீ வாழவேணுமென்பதிலும்உண்டு. தெய்வானை என்னும் தாய் இன்னமும் இந்த உலகத்திலை இருப்பது, ராமு என்ற மகன் ஒருவன் இந்த உலகத்திலை அவளுக்கு இருப்பதினுல்தான் என்பதை நீ அவசியம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தப் பிறப்பில் இது உனக்கு கடவுள் கொடுத்தவரம் இதை உதறிவிடாதே

ராமு: (அரைந்துகொண்டு அருகில் வந்து) நான் பாவி சாமி. இங்கே வாற மனுஷர்களையெல்லாம், எவளவு ஆசையோடும், பாசத்தோடும், நேசத்தோடும் பார்க்கிறேன். ஆனு ஒரு மனுஷனுவது ஆசையா, நேசமா, பாசமா ஏன் சாமி இரக்கமாகக்கூட, ஒருதரம் ஒரே ஒருதரம், ''ம்''... பார்த்ததே இல்லைச்சாமி. எனக்கு எவளவு துக்கமாக இருக்கு... (தொடரும்)

ஜே. எம். இராசு

## அவனும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

வேழைக்கிழவனின் குரல் எழும்பவில்லை! கரகரத்தது!

அப்பால் நகர்ந்த எனக்காக ஒருஆச்சரியம் காத்திருந்தது அதோ! பண்டிதர் அல்லவா நிற்கிருர். எந்தப் பெருமாளிற்காகநான்அவருடன் வாக்குவாதம் செய்தேனே அந்தப் பெருமாளை வருத்தம் பார்க்க வந்தவிடத்திலல்லவா அவரைக்காண்கின்றேன்!

ஆம் அவர் நோயாளியாகத்தான் காட்சியளிக்கிருர். அதுவும் பெருமாள் அணிந்திருக்கும் அதே நோயாளி உடையில்தான் அவரும் காட்சியளிக்கிருர்!

என்னைக்கண்டுவிட்டஅவர் முகத்தை எனக்குக்காட்டிக் கொள்ளாமல் திருப்பிக் கொள்கிருா. அவர் என்னை நேருக்குநேர் காண விரும்பவில்லை என்பதை உணர்ந்தேன். பேசாமலே சென்றுவிடலாம் என்று என் மனம் உந்தியது. மின்போன்றுஓர் உணர்வு என் உடலெங்கும் பரவிற்று.

''உமக்கு நான் காட்டித்தாறன் பாரும்! ஆம் அன்று நான் உணர்ச்சிவேகத்திலே உதிர்த்து விட்டவார்த்தையல்லவாஅது! அதற்கு இன்று வகை பிறந்துவிடட்து.

''சேர்'' மெதுவாகக்குரல் கொடுத்தேன். மெதுவாகத் திரும்பியவர் '' ஓம்'' தம்பி வாகும் ஏது இந்தப் பக்கம் என அவரே ஆரம்பித்தார். பேச்சை அவரிடம் இருந்த ஆதரவும் அன்பும் அப்பப்பா...... நான் எவரிடமுமே அப்படிப்பார்த்ததில்லை.

பெருமாள் இங்குதான் இருக்கிருர் அதுதான் பார்த்துப் போகவந்தேன்என்று கூறியதும் அவர் என்னைப் பார்த்த பார்வையிருக்கிறதே...... அது பெருமாள் உண்மையிலேயே உன் சித்தப்பாவா'' என்று கேட்பது போன்றிருந்தது.

[யாவும்கற்பனே]

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியத்தைப் பாராட்டுகிருர்கள்!

ஈழவளநாட்டின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதொரு இலக்கியக் காவியம் படைத்தோர் இலங்கையில் இல்லையே என்ற குறையைத் தீர்த்து வைத்த கவிஞர் காரை.செ. சுந்தரம்பிள்ளையின் கவித்துவம் பாராட்டுக்குரியது.

-சிரோன்மணி-கொழும்பு

ஃ ஃ ஃ

ஆயிரம் வராகன் என அள்ளிக்கொடுக்க அக்காலத்து அரசர்களோ, வள்ளல்களோ இல்லை என்ற ஏக்கம்தான் இக்காவியத்தைப் படித்து முடித்ததும் என் உள்ளத்தில் தோன்றியது.

—குணம் — தலையாளி

ஃ ஃ ஃ

ஈழநாடும், யாழ்ப்பாணமும், நல்லூரும் இவ்வளவு செல்வ வளங்களைப் பெற்றிருப்பதைக் கணக் கவிஞரிடம் நிறைந்த சொல் வளம் இருக்கிறது என்பதை நாம் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

-தமிழ்ப்பிரியை, யாழ்ப்பாணம்

இதுவரை எந்தவொரு ஸ்தாபனமும் இவ்வளவு தொகையைக் கவிதைக்காகக் கொடுத்து கவிஞர்களை வளர்க்க முன்வரவில்லை. இப்பணியைச் செய்த 'ஈழநாட்டுக்கும் சிறந்த காவியத்தைப் படைத்த கவிஞருக்கும் எனது வாழ்த்துக்கள்.

வி. இன்ஞசிமுத்து வேலணை.

ஃ ஃ ஃ

பிறநாட்டுக் காவியங்களைப் படித்துச் சுவைத்துவிட்டு நம் நாட்டிலும் இத்தகைய காவியங்கள் இல்லையே என்று ஏங்குவோரது ஏக்கத்தை நீக்கிய திரு. காரை. செ. சுந்தரம்பிள்ளையைப் போற்ருமல் இருக்க முடியாது.

அமீர்அலி-பேராதனை.

ஃ ஃ ஃ

காவியப்படைப்பின் முதல் முயற்சியாலும் வெற்றிவாகை சூடியுள்ளார் கவிஞர். சுந்தரம்பிள்ளை.

கண்ணன்-மட்டக்களப்பு.

ஃ ஃ ஃ

தமிழன் வீரத்தை எடுத்தியம்பும் சிறந்தகாவியமாக அமைந்துள்ளது.

தமிழ்நேசன்-காலி.

## கடல் நீரை குடிநீராக்கும் ஆலை!

குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காக, கடல் நீரை குடி நீராக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் வெற்றி பெற்றிருப்பது தெரிந்ததே. ஸ்பானிஷ் வட ஆபிரிக்காவில் ''சியூடா'' என்னுமிடத்தில் கடல் நீரிலிருந்து குடி நீர் தயாரிக்கும் சிறு ஆலையை ஜெர்மன் நிபுணர்கள் உருவாக்கியுள்ளனர்.

நாள்தோறும் 4000 கன மீட்டர் தண்ணீர் வழங்குவதுடன் நகருக்கு 2200 'கிலோவாட்ஸ்' மின்சக்தியையும் வழங்குகிறது. இந்த ஆலையில் இரு டர்பைன்கள் பொருத்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். இந்த கடல்நீர் ஆலை திருப்திகரமாகச் செயற்படுவதால், ஜெர்மன் ஸ்தாபனத்திற்கு மேலும் பல இடங்களிலிருந்து ஆர்டர்கள் வந்திருக்கின்றன.

## எட்னவின் பொருள்

எட்ன பேர்பெற்ற எரிமலைகளில் ஒன்று. சிசிலித் தீவின் கீழ்க்கரையில் உள்ளது. இதன் உயரம் 10, 750 அடி, எட்ன என்னும் பெயர் எரிகிறேன் என்னும் பொருள்படும். கிரேக்கச் சொல்லிலிருந்து பிரிந்தது.

# உலகுக்கு ஒளி கொடுக்க

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அர்ப்பணிக்கும் நோக்கமாகவே பாதுகாத்து பேணி இறைவனில் அளவில்லா நேசங்கொண்டு அவனை வளர்த்து வந்தனர். மரியாய் தூயஇதயம் கொண்டு ஜென்ம பாவமில்லாமல் தோன்றிய ஒரேஒரு மானிடப்பிறவியாகத்திகழ்ந்தார். இவளின் அன்பு முகத்தைக் கண்ட எத்தனையோ பாவிகள் மனம்திரும்பி இறைவனைப் பின்பற்றிஞர்கள். அவள் பிறக்கும்போதும் பிறந்தபின்பும் பாலகயேசுவை பெறும்போதும்கூட ஒரே தன்மையான அன்பு பொறுமை தாழ்ச்சி பிறர் சிநேகம் என்ற இன்னேரன்ன புண்ணியங்களைக் கைக்கொண்டிருந்தாள். கற்பை உயிரினும் நேசித்தாள். யேசுகிறிஸ்துவை உதரத்திலே கருத்தரித்தபோதும் அவரைப்பெறும்போதும், பெற்றபோதும்கூடக் கன்னியாகவே இருந்தாள். அதஞல்தான் அவளைக் கன்னி மரியாள் என்றும் அழைக்கிருேம்.

அவளுக்குப் பாதுகாவலராகச் சூசையப்பர் என்னும் மனிதர் நியமிக்கப்பட்டார். இவர் கற்பு தாழ்ச்சி, வறுமை, பொறுமை எல்லாவற்றையும் நேசித்தார். கன்னி மரியாளின் வயிற்றிலே இறைவன் கருக்கொண்டு தமாகவே அவளுக்குக் குழந்தையாகவேண்டும் என்ற சித்தத்தை சூசையப்பர் அறிந்திலர். ஆஞல் அவர் தமது பாதுகாவலிலுள்ள கன்னிகை, கற்பவதி என்று கேள்வ்ப்பட்டதும் தாங்கொணுத் துயருற்ருர். சஞ்சலத்தால் தமது மூட்டை முடிச்சுக்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவளை விட்டு விட்டு தாம் வேறிடத்திற்குப் போகும் நோக்கத்துடன் புறப்பட்டார். அப்போது அவருக்கு சம்மனசு தரிசனமாகி மரியாயின் வயிற்றில் கருத்தரிக்கப் பட்டிருப்பது இறைவன் என்றும் இறைவன் மனிதனின் பாவச்செயலால் மனிதனுக உருவாகாமல் தாம்தாமே தம்மை கன்னி மரியாயின் வயிற்றில் கருவாஞர் என்றும் விளக்கி அவளைப் பத்திரமாகப் பாதுகாக்கும்படி கூறிஞர்.

அதன்படியே சூசையப்பர் மரியாயின் பாதுகாவலராயிருந்து வரும்வேளையில் அக்கால வழக்கமாகிய குடிக்கணக்கு எடுக்கும் காலம் நெருங்கியபடியால் அவர் கலிலேயாவிலுள்ள நசரேத்தை (ஊரை) விட்டு யூதேயாவிலுள்ள பெத்தலேகம் என்னும் தாவீது நகரத்திற்குத் தமது குடிக்கணக்கெடுப்பிற்கு பெயர் எழுதிக் கொடுக்கும் நோக்கமாகச் சென்ருர், அக்காலத்தில் ஒவ்வொரு மக்களும் தமது சொந்த ஊரில் குடிக்கணக்குக்குப் பெயர் எழுதிக் கொடுக்கும் வழக்கமாகையால் சூசையப்பர் தமது நகராகிய தாவீது நகரத்திற்குப் போகவேண்டியது கட்டாயமாயிருந்தது. தமது பாதுகாவலில் உள்ள கன்னி மரியாளை அழைத்துக் கொண்டு சென்ருர்.

அங்கே மரியாயிக்குப் பேறுகாலம் நிறைவெய்தியிருந்ததஞல் அங்கு தங்கிப் பிள்ளையைப் பெற்றெடுக்க அந்நகரிலுள்ள வீடுகளில் சிறிய இடமாவது கொடுக்கும்படியாகச் சூசையப்பர் கேட்டார் மக்கள் ஒருவராவது அவர்கட்கு உதவ முன்வரவில்லை இந்நிலையில் அவர் இறைவனைத்தான் வேண்டிஞர்; அப்பொழுது அவர் கண்ணுக்கு மாட்டுக் கொட்டில் ஒன்று தோன்றியது. ஒரு கணம் மனவேதனை அடைந்தார். இந்த உலகத்தையே சிருஷ்டித்த இறைவன் இந்த மாட்டுக்கொட்டிலிலா பிறக்க வேண்டும் என்று தூக்கப்பட்டார். ஆஞல் அது இறைவனின் சித்தமாயிற்றே என்றெண்ணிக் கவலையை மறந்தார். அங்கேதான் கன்னி மரியாள் பாலயேசுவைப் பெற்றெடுத்தாள்,

அவரின் பிறந்த நாளிலிருந்தே அவரைப் போற்றிக் கொண்டாடும் தினங்களிலே இறைவன்நமக்கருளிப்போன நற்குணங்களை நாம் கைக்கொண்டு இந்த நன்ஞளை நமது மனத்திற்குச் சாந்தியளிக்கும், தூய்மை கொடுக்கும் நளாகக் கருதி, இறைவனுக்கு நன்றி செலுத்தி இந்தநாட் தொடக்கம் தூய்மையாகப் பொறுமையாகத் தாழ்ச்சியாக வாழப் பழகிக் கொள்வோமாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபோதும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மலர், மஞ்சல் வண்ணக் கொன்றை மலர்மாலை, குளிர்ந்த சிவகரந்தைப்பூ, முறுக்கிக்கட்டிய சடாமுடியில் இவைகளைத் தாங்கும் மெய்ப்பொருளாம் எம்பிரானுர் தங்கும்கோயில் யாது? எனில்-

வானத்திலே உலவும் கார்கள் - முகில்கள், வானளாவி உயர்ந்து நறுமணங்கமழும் சோலையிலே வந்துபடிகின்றன. அதனுல், அச்சோலை மருங்கான வீதிகளிளெல்லாம் தண்ணிய நறுமணங் கமழும் மாலைகள்பொலிந்து விளங்குகின்றன. அந்த வீதிகளிலே நடன அரங்குகளைக்கொண்ட தேர்கள் ஊருகின்றன. அந்த அரங்குகளிலே அழகிய ஆபரணங்களை அணிந்த மகளிர் இறைவனது திருவருட்பொலிவான நடனம் பயிலுகிருர்கள். அவ்வாறுஇயற்கை அழகோடு செயற்கைச்சிறப்பும் பொலிந்து விளங்குவது திருவையாற்றுத் திருத்தலம். அதுவே எம்பிரானுர் உறைவிடமாம். (5)

வேந்தாகி விண்ணவர்க்
கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்த
ஞகிப்
பூந்தாம நறுங்கொன்றை
சடைக்கணிந்த
புண்ணியனுர் நண்ணுங்
கோயில்
காந்தார மிசையமைத்துக்
காரிகையார்
பண்பாடக் கவிஞர்
வீதித்
தேந்தாமென் றரங்கேறிச்
சேயிழையார்
நடமாடுந் திருவை
யாறே.

சிலர் விண்ணுலக அரசர், சிலர் மண்ணுலக அரசர், இன்னும் நாட்டரசர், காட்டரசர், வீட்டரசர் போலன்றி இறைவனே அகிலஆன்ம வர்க்கத்துக்கும் நல்லநெறிமுறைகளை காட்டி அருளும் வேந்தனுய், விகிர்தன்-உலகியலினின்றும் வேறுபட்ட தனிப்பரம் பொருள். பொலிவு பொருந்த மணங்கமழும்கொன்றை மாலையைச் சடாமுடியிற் சூடிய புண்ணிய வடிவினன் உலகினர் பொருட்டுக் கோயில் கொண்ட இடம் யாது? எனில்—

இசைவல்லுனர்களாம்அழகிய மங்கையர் காந்தாரப் பண்ணினை இசைத்தபடி வீதிவலம் வருகின்றனர். அந்த இசைக்கு ஏற்ற தாளலயம் பொருந்த ''தீந்தாம்'' என்னும் சதங்கை ஒலி பரவப் பதம்பிடித்து, அசையும் அரங்குகளிலே நடனம் புரியும் எழில்மகளிர் வலம் வரும் திருவையாறு என்னுந் திருத்தலமாம். (6)

நின்றுலா நெடுவிசும்பில்
நெருங்கிவரு
புரமூன்றும் நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட
சிலையாளி
மலையாளி சேருங் கோயில்
குன்றெலாங் குயில்கூவக்
கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசம்மல்கு
தென்றலார் அடிவருட
செழுங்கரும்பு
கண் வளருந் திருவை
யாறே.

நெடியபெரிய வானவெளியிலே பொன், வெள்ளி இரும்பு என்னும் மூன்றுலோகங்களாலும் தனித்தனியாகத் திரிபுரத்துஅவுணர் அமைத்துக்கொண்டு அகிலத்தையும் அழிவு செய்வதற்குமுயன்ற மூன்றுகோட்டைகளும் நுண்ணிய பொடியாக வெந்து அழியும்படி அம்பாகச் சிரிப்பு என்னும் அக்கினியைச் செலுத்தி அருளியவர் இறைவன் மகாமேரு மலையையே வில்லாக ஏந்தியவர் அப்பெருமான் ஆன்மாக்கள் பொருட்டு எழுந்தருளி வீற்றிருக்குந் திருக்கோயில் யாது? எனில்-

குயில்கள் கூவும் ஓசையானது மலையிடங்களிலே எதிர் ஒலிக்கின்றது. செழுமை வாய்ந்த தேனைச் சொரியும் மலர்களை அளாவிய தென்றற்காற்ருனது நறுமணங் கமழ வீசுவதனுல் முற்றிய கரும்புகள் சாய்கின்றன. சாய்ந்தபடி கணுக்கள் ஓங்கி வளருகின்றன. அடிக்கரும்புகளிலே காற்றுப் படிவதை ''அடிவருடுதல்'' எனவும், கணுக்கள் ஓங்கிவளருவதை ''கண்வளருதல்'' எனவும் அமைத்த அருள் வாக்கின் நயம்வியந்து வியந்து இன்புறத்தக்கது. இத்துணைவளம் மலிந்த திருத்தலம் திருவையாறு ஆகும். (7)

# நாவலர்பெருமானின் சரித்திர ஆராய்ச்சிநூல் மும்மொழியிலும் வெளிவரவேண்டும்

அறநெறிக் காவலர்
## முதலியார் செ. முத்துத்தம்பி

சரித்திர காலத்துள், பஞ்சகண்டங்களிலும் தோன்றிய பெரியார்களுள் முதல்வரிசையில் வைத்தெண்ணப்படத்தக்கவர் நாவலர் பெருமான் என்பது எனது கருத்தாகும். இத்தகைய மகானின் பெருமைகளை விளக்கும் நூல்கள்பல

### ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

இதுவரை வெளிவந்துள்ள போதிலும் அவரது வாழ்க்கை முழுவதையும் உள்ளடக்கியதான பெருநூல் வெளியாகவில்லை. அன்னரது வாழ்க்கைச் சரித்திரத்தைக்கொண்ட ஒரு முழுநூல் கட்டாயமாக வெளிவரவேண்டும். இது பலவகையிலும் அவசியமாகும்.


இப்பாரிய பணியைச் செய்து முடிப்பவர் யார்? பெருமான் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட சபையே இதனைச் செய்யும் வல்லமையுடையதாகும். ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை தோன்றிய சிறிதே நாளில் அது ஆற்றிய சாதனை மிகப் பெரிதாகும். பெருமானுக்குச் சிலை எடுத்ததன்மூலம் சைவத்தமிழ் உலகில் இச்சபை ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்தியதை யாரும் மறந்துவிட முடியாது. இப்பணி தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டியதொன்ருகும்.

பெருமானின் சரித்திர ஆராய்ச்சிநூல்தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் வெளிவருதலவசியம், இந்நூல் போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் யாழ்ப்டாணத்தில் வந்திறங்கிய காலத்தை ஒருகட்டமாகவும், போர்த்துக்கேயர் காலத்திலிருந்து பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி முடிவடைந்த அதாவது இலங்கை சுதந்திரமடைந்த காலமான 1947-ம் ஆண்டு வரையான காலத்தை ஒரு கட்டமாகவும் கொண்டஇரு பிரிவான காலகட்டங்கள் இச்சரித்திரத்தில் ஆராயப்படவேண்டியேற்படும். காய்தலுவத்தலின்றி இந்நூல் ஆராய்ந்தெழுதப்பட வேண்டியதொன்று என்பதால், இந்நூற்பணியை பெருமான்மீது பற்றும் பக்தியும் போதிய சரித்திர, தமிழ், சைவ அறிவும் படைத்த பெருமக்களைக்கொண்ட குழுவொன்றை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை அமைத்து அச்சபையிடம் இப்பணியை ஒப்படைத்தலே நன்று. ஈழத்தின் முதுபெரும் தமிழறிஞரான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைத் தலைவராகவும் மற்றும் முதலியார் குல. சபாநாதன், திரு. ஸி. எஸ். நவரத்தினம், ச. தனஞ்சயராசசிங்கம். தி. பெரியதம்பிகணநாதபிள்ளை ஆகியோரை உறுப்பினராகவும் தகுதியான வேறுபலரையுங் கொண்டு குழு அமையலாம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

பெருமான் பிறந்த இடம், அவர்தம் பெற்ருேர் சகோதரர், அவரது ஆசிரியர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள், அவர் செய்த யாத்திரைகள், வழிபட்ட ஸ்தலங்கள், ஸ்தல தொண்டுகள், படித்த பள்ளிக்கூடங்கள், அவர்

[16-ம் பக்கம் பார்க்க]

10,000
மசி-பேர்குசன்
உரிமையாளர் பிழை
விட்டிருக்க முடியாது.



10,000 மசி – பேர்குசன்,
நாட்டின் ட்ராக்டர்கள் தொகையில்
75% மானவை.

10,000 மசி – பேர்குசன் ட்ராக்டர்கள்,
பல கோடி ரூபாய்
பெறுமதியான பதில் உறுப்புக்கள்,
...ணைகொண்டவை.

10,000 மசி – போகுசன்
உரிமையாளரே இத் ட்ராக்டரின்
வேளாண்மைப் பாவனைச்
சிறப்புக்கு அத்தாட்சி.

10,000 மசி – பேர்குசன்.
நாடெங்கிலும் இருபத்து மூன்று
நிலையங்களில் சேவை வசதி
கொண்டுள்ளன.

முதலாவதாக ...ற்கப்பட்ட மசி – பேர்குசன் இன்றும்
பாவனையில் உள்ளது. எனவே ... 10,000 மசி – பேர்குசன்
உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாதே !

MF BG

பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டேட்
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.
டெலிபோன் 98097.

42483

வெளிவந்துவிட்டது !

1970
"ஈழநாடு"
தினக் குறிப்பு
விலை: ரூ. 1-35 சதம்

"ஈழநாடு"
Pocket Diary
விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!
நவீன அமைப்பு!!

எமது பத்திரிகை
விற்பனையாளர்களிடம்
பெற்றுக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

# அமெரிக்கா-சீன உறவு

சர்வதேச அரசியலில் திடீர்த் திருப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எலியும் பூனையும்போல இருந்த கிழக்கு ஜெர்மனிக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையில் உறவு வலுப்பெற்று வருகிறது. நவசீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் உறவு ஏற்படுவதற்கான அறிகுறிகள்தென்படத் தொடங்கியிருக்கின்றன.

திரு. நிக்ஸன் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோதே அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கைகளில் புதிய மாறுதல்கள் ஏற்படலாமென எதிர்பார்க்கப்பட்டது. இது வீண்போகவில்லை.

சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் நல்லுறவில்லை. இச்சமயத்தில் சீனாவுடன் அமெரிக்கா உறவு கொள்ள முனைவது சோவியத் யூனியனுக்கு எப்படியிருக்குமோ?

என்றாலும் மேற்கு ஜெர்மனியும் சோவியத் யூனியனும் நெருங்கிய உறவு ஏற்படுத்த முன்வந்திருக்கும்போது சீனாவுடன் உறவு கொள்ள அமெரிக்கா முன்வந்ததையிட்டு சோவியத் கவலைகொள்ள இடமில்லை.

மேற்கு ஜெர்மனியில் புதிய அரசாங்கம் ஏற்பட்டு அதன் தலைவரான வில்லி பிரான்ட் பிரதமராக வந்ததுதான் மேற்கு கிழக்கு நாடுகளில் அரசியல் நிலைமை மாறி வருவதற்குக் காரணம். கிழக்கு ஜெர்மன் பிரதமர் விசேஷ தூதுவர் ஒருவரை மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பியிருக்கிறார். மேற்கு ஜெர்மனியரும் கிழகக்கு ஜெர்மனியரும் இரு பகுதிக்கும்போய் வருவதற்குள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டுமென்ற யோசனையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இரு தரப்பினரையும் தடுத்து வைக்கும் பெர்லின் சுவரை அகற்றவேண்டுமென்ற யோசனையும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தத் தடைகள் முற்றாக எடுபடுமென்று எதிர்பார்க்க முடியாது ஆனாலும் இரு ஜெர்மனிகள் நிலைபெற்றுவிடுவதற்கும் ஜெர்மன் இணைப்பு முயற்சி இனி இருக்காதென்பதற்கும் இப்போதைய நிகழ்ச்சிகள் சான்று பகர்கின்றன.

அமெரிக்காவின் நல்லுறவு முயற்சியை சீனா எப்படி ஏற்றுக்கொள்ளுகிறதென்பது தெரியவில்லை. நவசீனாவை அமெரிக்கா அங்கிகரித்து ஐ. நா. விலும் அது அங்கத்துவம் வகிப்பதற்கு அமெரிக்கா இடையூறு செய்யாமலும் இருந்தால் உலக சமாதானத்துக்கு ஒரு வழி பிறக்கும். நல்லகாலம் உருவாகும்.

நவசீனாவுடன் அமெரிக்க வர்த்தகத் தொடர்பு வைத்துக்கொள்வதற்கு இது வரையிருந்துவந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. அமெரிக்கா தமது சொந்த உபயோகத்துக்கு நூறு டாலர் பெறுமதியான சீனப்பொருட்களைத்தான் வாங்கமுடியுமென்றிருந்து வந்த கட்டுப்பாடும் நீக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் போலந்தின் தலைநகரான வார்சோவில் சீன—அமெரிக்கத் தூதர்கள் சந்தித்துப் பேசினர். அந்தப் பேச்சு வார்த்தைகள் திடீரென நின்றன. இதற்கு சீனாவில் நடந்த சம்பவங்களும் காரணமாக இருந்திருக்கலாம். இப்போது வார்சோவில் சீன-அமெரிக்கத் தூதர்கள் மீண்டும் சந்தித்துப் பேசியிருக்கின்றனர். இச் சந்திப்புக்கும் வர்த்தகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதற்கும் எதுவிதத் தொடர்புமில்லையென்று அமெரிக்க ராஜாங்க இலாகா தெரிவித்திருக்கிறது.

திரு. நிக்ஸன் ஜனாதிபதியானதும் கம்யூனிஸ்ட் நாடான ருமேனியாவுக்குச் சென்றார். இந்த கம்யூனிஸ்ட் நாட்டு நல்லெண்ண விஜயம் சோவியத் யூனியனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. தனது ருமேனிய விஜயம் யாருக்கும் எதிரானதல்ல என்று அவர் சமாதானம் சொல்லியும் சோவியத் யூனியனுக்கு நம்பிக்கையேற்படவில்லை.

எஸ். எம். ஜி.

## விற்பனைக்கு

காணி:

நீராவியடி பிரவுண்ரோட் 1-ம் ஒழுங்கையில் 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு க. செல்வத்துரை, 118, அரசடிரோட், கந்தர்மடம்.

1724


மகத்தான நத்தார் திருநாளை
சிறப்புடன்கொண்டாடஉங்களைஅழைக்கின்றது
பொகுமால்ஸ்

## மலிவு விற்பனை

முக்கியமாக நத்தார் திருநாளை குதூகலமாக கொண்டாட புதிதாக வரவழைக்கப்பட்ட பல ரக சேட்டுகளை கொள்ளை மலிவுவிலையில்விற்றுமுடிப்பதே எமது முழு நோக்கம்.

| பல ரக சேட்டுகளில் மிகச்சில: | வ. வி. | ம. வி. |
|---|---|---|
| டிப்ளோமற் டெரலின் (லக்ஸறி)சேட் | 29-50 | 21-00 |
| டிப்ளோமற் டெற்றேன் கொட்டன் சேட் | 22-50 | 16-50 |
| டிப்ளோமற் அரஸ்டிகோட் சேட் | 17-50 | 11-00 |
| மான்கற்றன் டெரலின் சேட் | 27-50 | 17-00 |
| டியூரே டெரலின் சேட் | 29-50 | 16-00 |
| மொட்டெக்ஸ் நைலோன் சேட் | 25-50 | 19-00 |
| ஸ்கைவே டெரலின் சேட் | 24-50 | 15-00 |
| ஸோடியக் டெரலின் சேட் | 22-50 | 11-50 |

இன்னும் ஆயிரம் ஆயிரம் சேட்டுகள் மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது காட்சி அறைக்கு விஜயம் செய்து சேட்டுகளின்விலைகள்குறைக்கப்பட்டுள்ளதைவந்துபாருங்கள்.

டிப்ளோமற் ரெற்றேன்-கொட்டன் சேட் பச்சை நிறம் மட்டும் வழமையான விலை 22-50 மலிவு விலை 14-00 எம்மிடம்பெற்றுக்கொள்ளலாம்.

பொன்னான இந்த வாய்ப்பை நழுவவிடாதீர்கள்.

எந்நாளும் உங்கள் ஆதரவை நாடும்

பொகுமால்ஸ்
சேட் மாளிகை
49, மெயின்வீதி :: யாழ்ப்பாணம்.


## கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

(பருத்தித்துறை நிருபர்)

துன்னாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வல்லிபுரம் என்பவர் கண்டாவளையிலுள்ள தோட்டமொன்றுக்குக் கிருமிநாசினி மருந்து அடித்தபின்னர்மயக்கமுற்று இறந்தார். கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். இவருடன் கிருமிநாசினி அடித்த ஐயம்பிள்ளை இராசையா என்பவர் மயக்கமான நிலையில் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


தையற் கலை வகுப்பு

வெளிநாட்டில் பயிற்சிபெற்ற பிரபல தையற்கலை நிபுணரால் ஆண்களுக்கும், பெண்களுக்குமான எல்லா உடைகளையும் விஞ்ஞான முறையில் வெட்டுவதற்கும், தைப்பதற்கும் சிறந்த விளக்கப் படங்களுடன் தமிழில் தபால்மூலம் பயிற்சியளிக்கப் படுகிறது.

பல கைதேர்ந்த தையற் கலைஞர்களைக் கொண்டு இயங்கும் எமது வகுப்பின் மூலம் பாடங்களைப் பெற்று நீங்களும் ஒரு சிறந்த தையற்கலை நிபுணராகலாம்.

இலவச விபரங்களுக்கு:

The Modern Scientific School of tailoring and Dress Making, 49, Baseline Road, Colombo-8.


## 'ஒத்துழைக்கவும்'

உடுப்பிட்டி, ஞாயிறு கரணவாய் தெற்கில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும், இதனைத் தடுப்பதில் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கரணவாய் தெற்குக் கிராம சேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை வேண்டுகோள் விடுத்து உள்ளார்.


REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poya, Pre-poya 4 shows
Sean Connery, Karin D'Or
in
YOU ONLY LIVE TWICE

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
கிருஷ்ணா - கே. ஆர். விஜயா
வாணிஸ்ரீ
நடித்த
மாஸ்டர் மதராஸ்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
இரகசியப் பொலிஸ்-115

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி ஆர்-சரோஜாதேவி
நடித்த
படகோட்டி
(ஈஸ்மென்கலர்)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya Prepoya 4 Shows
Horst Buchlz
in
JOHNY BANCO
(Color)

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
களத்தூர் கண்ணம்மா

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நடித்த
மகாதேவி
(புதிய கொப்பி)


ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ். எஸ் ஆர். - ராஜசுலோசனா
நடித்த
குலவிளக்கு

3வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்

மொழிப்பிரச்னையை மாணவர்கள் விருப்பு வெறுப்பின்றி லட்சியக் கண்ணேக்குடன் ஆராயவேண்டும். பலாத்காரமான கிளர்ச்சியில் இறங்கினல்தான் அரசு செவி சாய்க்கிறது என்ற பலமான எண்ணம் மாணவர்களிடையே காணப்படுகிறது. ஜனநாயக வாழ்க்கை முறைக்கு இது பொருந்தாது.

ஃ ஃ ஃ

எவ்வளவுக்கெவ்வளவு சுதந்திரம் அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கட்டுப்பாடும் பணிவும் இருந்தாகவேண்டும். கட்டுப்பாடு, தாழ்மையிலிருந்து தோன்றும் சுதந்திரத்தை மறுக்கமுடியாது. கட்டுப்பாடின்றி விருப்பப்படி நடப்பது மட்டரகத்தின் அறிகுறியாகும். அது தனக்கும் பக்கத்திலிருப்பவர்களுக்கும். கேடுவிளைப்பதாகும்.






# அடுத்த ஆண்டில் வடக்கில் ஏழு தமிழ் பௌத்த பாடசாலைகள்?

[காரியாலய நிருபர்]

**வடபகுதியில் அடுத்தவருடம்முதலாம் தவணைக்குள் மேலும் 7 தமிழ—பௌத்தபாடசாலைகளை நிறுவும் முயற்சிகளில்கல்வி கலாச்சார அமைச்சுதீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.**

இவ்ஏழு பௌத்த பாடசாலைகளில் இரண்டு குடியேற்றத் திட்டங்களிலும், இரண்டு யாழ்ப்பாண நகரிலும், மற்றைய மூன்று பாடசாலைகள் மூன்று தொகுதிகளிலும் நிறுவப்படுமென்றும் இதற்கான ஒழுங்குகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சம்பந்தப்பட்ட ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சைச்சேர்ந்த இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் கடந்த வாரம்கிளிநொச்சிப்பகுதியிலுள்ள குடியேற்றத்திட்டங்களுக்கு விஜயம் செய்து, அங்கு சிங்களம் படிக்கவிரும்பும் தமிழ்மாணவர்களின் பெற்றோர்களிடம் கையொப்பம் சேகரித்துச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

மேலும்இரு கல்வி இலாகா அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு விரைவில்வந்து இங்கு பௌத்த பாடசாலைகள் நிறுவவிருக்கும் இடங்களைப் பார்வையிடுவார்களாம்.

இதுதவிர வடக்கிலுள்ள சகல பௌத்த பாடசாலைகளிலும் கல்விகற்பிக்க சுமார் 30 சிங்கள ஆசிரியர்களும், ஒரு சிங்கள வித்தியாதரிசியும் ஜனவரியில் நியமிக்கப்படலாமென்றும் தெரியவந்துள்ளது.

ஜனவரிமாதக் கடைசிப் பகுதியில் யாழ்ப்பாண நகரில் முதலாவது தமிழ்-பௌத்த பாடசாலையை ஆரம்பித்துவைக்க கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இங்குவரலாம் எனவும் இதனேடு சம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரிஒருவர் சொன்னர்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 8-ந் திகதி [23-12-69]

## கசப்பான உண்மை

செனேட்சபைத் தலைவரும், இலங்கையிலே காந்தி நூற்றுண்டு ஜயந்தி விழாச் சபைத் தலைவருமான ரத்னுயக்கா அவர்கள். கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், சில கசப்பான உண்மைகளைக் கூறினர்.

சட்ட விரோதக் குடியேற்றத்தைப்பற்றி ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டுமென்று இலங்கை பௌத்த காங்கிரஸ் ஒரு தீர்மானம் செய்துள்ளதாகவும், புத்தர் பிரானே 'விசா' இல்லாமல் இலங்கைக்கு வந்தால், அவரையும் ஒரு 'கள்ளத்தோணி' என்று அவர்கள் கூறுவார்களோ என்று மனவேதனையுடன் சொல்லி வருந்தினர் திரு. ரத்னுயக்கா. இதுதானு பௌத்த காங்கிரஸ் செய்யவேண்டிய வேலை? புத்தர்பிரான் கூறிய உபதேசப்படி பௌத்த மக்கள் நடக்கச் செய்யவேண்டிய வேலைகள் மலைபோலுள்ளனவே!

மகாத்மாஜியின் நூற்றுண்டு ஜயந்தி விழாவைச் சுமார் நூற்றைம்பது நாடுகள் கொண்டாடியுள்ளனவாம். ஆனல் கண்ட பலன் என்ன? இந்தியா இலங்கை உள்ளிட்டு பல நாடுகளிலும் பலாத்காரமும், பஞ்சமாபாதகங்களும் அதிகரித்துள்ளதைப் பார்த்தால், இவ்வித விழாக்களையும், கூட்டங்களையும் நடத்துவதில் உண்மையில் ஏதும் பயனுண்டா என்று தோன்றுகிறதென்று மனம் புழுங்கினர் அவர்.

இராவணன் சிவபூசை வழிபாடுகளில் சிறந்தவன். ஆனலும் அவனது ஒரு தீய குணத்தால் அவனும், அவனது ராஜ்யமும் அழிந்தன. "கங்கையாடிலென், காவிரி ஆடிலென்........... எங்கும் ஈசன் எனுதவர்க்கில்லையே" என்று அப்பர் அடிகள் பாடியுள்ளார்கள். எல்லா உயிர்களும் இறைவடிவங்கள் என்பதை உணராதவர்களுக்கு யாத்திரை, வழிபாடு, விரதம் முதலியவற்றல் பயனெதுவுமில்லையாம்!

கோவில் கட்டுகிறேம், விழாக்கள் நடத்துகிறேம், விரதங்கள் கிடக்கிறேம். ஆனல் எல்லாரும் இறைவனின் வடிவங்கள் என்று உணராதவரை உயிர்களிடத்தில் உண்மை அன்பு எப்படி நமக்குப் பிறக்க முடியும்? வெகுவாக நம்மில் பலரும் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுகிறேமல்லவா? இந்தக் கசப்பான உண்மை, நம் மனதைத் திருத்துமாயின், நம்மளவில் நாம் பயன்பெற்று உய்யக்கூடும்.

## அறிவித்தல்

### இலங்கை - நோர்வே அபிவிருத்தித் திட்டம்

**காரைநகர்**

மேற்படி நிர்வாகம் வருகிற தைமாதம் தொடக்கம் மீன்பிடிப்பயிற்சி வகுப்பு ஒன்றை, ஆரம்பிக்கும். மாணவர்கள் 22 வயதிற்குட்பட்டவர்களாயும் S-S-C யில் சித்தியடைந்தவர்களாயும், ஆங்கில அறிவுடையவர்களாயும், மீன்பிடித் தொழிலில் ஆர்வமுள்ளவர்களாயுமிருத்தல் வேண்டும். பயிற்சி ஆறுமாத காலம், அனுபவமிக்க நோர் வே-நாட்டு ஆசிரியரால் ஆங்கிலத்தில் நடாத்தப்படும். பயிற்சிக்காலத்தில் கைச்செலவுப்பணம் (Pocket - Expenses) மாத்திரம் வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் உத்தியோகம் கிடைக்குமென உறுதியளிக்கப்படமாட்டாது. மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் விரும்பப்படுவர். 28-12-69 க்குமுன் விண்ணப்பிக்கவும்.

அக்கிராசனர்.
21-12-69
1891

# 258 ஆண்டுகளுக்கு முன் கடலில் அமிழ்ந்த நாணயங்கள்

லண்டன், டிச. 21

1711ம் ஆண்டு ஆங்கில கால்வாயில் மூழ்கிய டச்சுக் கப்பல் ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட, 2000 ஒல்லாந்து நாணயங்கள் அண்மையில் லண்டனில் 14,380 பவுண்களுக்கு விற்பனையாகின. இந்தப்புதையலைக் கொண்ட கப்பல் இலங்கை நோக்கி வந்துகொண்டிருந்தபோதே பாறையொன்றில் மோதி கடலில் மூழ்கியதென்பது குறிப்பிடத்தக்கது.

''டீலிப்டே'' எனப்படும் இந்த ஒல்லாந்துப் போர்க்கப்பல், டச்சு கிழக்கிந்திய கம்பனிக்கு சொந்தமானது. இந்தக் கம்பனியின் நிர்வாகச் செலவுக்கென பணத்துடன் 1711ம் ஆண்டு, ஆம்ஸ்ரடாம் நகரிலிருந்து இலங்கை நோக்கி இந்தப் போர்க்கப்பல்புறப்பட்டது. அவ்வேளை ஸ்கொட்லாந்திற்கு வடக்கே பாறையொன்றில் மோதி இக்கப்பல் மூழ்கியது. இந்தக்கோர விபத்தில் ஒருவரைத்தவிர, கப்பலில் சென்ற அனைவரும் உயிரிழந்தனர்.

1965ம்ஆண்டளவில் பிரிட்டனில் நடாத்திய சமுத்திர ஆராய்ச்சியின்போது இக்கப்பல் கடலினடியில் கண்டுபிடிக்கப்பட்டது. பின்பு 1967ம்ஆண்டளவில் இக்கப்பலில் கொண்டு செல்லப்பட்ட 'புதையல்' மீட்டெடுக்கப்பட்டது.

இந்த டச்சு நாணயங்கள் 1659ம்ஆண்டிலிருந்து 1676-ம்ஆண்டுவரையிலான காலக்கட்டத்தில் அச்சடிக்கப்பட்டவை என்றும், உவர்ப்பு நீரால் பெரும்பாலான நாணயங்கள் நிறம்மாறி, துருப்பிடித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

## நாவலர்

[14ம் பக்கத் தொடர்ச்சி]

ஆற்றிய தொண்டுகள் முதலிய இன்னேரன்ன சகல விபரங்களையும்முடிந்தவரை அவ்வவற்றுக்குரிய படங்களுடன் ஒரே முறையில் காணக்கூடியதாக இச்சரித்திர ஆராய்ச்சி நூல் அமைவது இத்தலைமுறையினருக்கும் சிறப்பாக எதிர்கால சந்ததியினருக்கும் பெருநன்மை பயக்கும். இப்பாரிய பணியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை நிறைவேற்றும் என எதிர்பார்ப்போம்.

## ஈழத் தமிழர்

1ம் பக்கத் தொடர்ச்சி)

கியங்கள் பற்றிய ஆராய்ச்சி.

0 இலங்கையின் வடபகுதி கிழக்குப்பகுதி ஆகியவற்றின் பயிர்ச்செய்கை விருத்தி, பிரச்னைகள் பற்றி ஆராய்தல்.

0 மலையகத்தில் வாழும் மக்கள் தொடர்பான ஆராய்ச்சி.

இலங்கையில் வாழும் பல்வேறு இன மக்களிடையே நிலவும் தொடர்புகள், மாற்றங்கள் முதலியன சம்பந்தமான விடயங்கள் பற்றி ஆராய்ச்சி.

இம் மாநாட்டுச் செலவுக்குச் சுமார் 50 ஆயிரம் [illegible] த்துக் கொடுக்க கிழக்கிலங்கை மக்கள் முன்வந்துள்ளதாக இது சம்பந்தமாக மட்டக்களப்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

மாநாட்டுக்கான சகல ஒழுங்குகளும் இப்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## விற்பனைக்கு

லொறி:

மிகவும் நல்ல நிலையில் உள்ள CY 2933 AUSTIN விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கமலவாசா, நந்தாவில், கொக்குவில்.

1727

2 கிழமையில் முட்டை இடக்கூடிய 50 நல்ல இனக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ரூ. 800/க்கு கிட்டிய விலையில் கிடைக்கும்.

1619

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஒருவரை காணவில்லை

(காரியாலய நிருபர்)

நல்லூர் ஜமுனரி குளத்தில் குளிக்கச் சென்ற மூவரில் ஒருவர் காணமல்போய் விட்டதாகப் பொலிஸில் அறிவிக்கப்பட்டுள்ளது. சடலம் இன்னமும் அகப்படவில்லை. பொலிஸார் தேடுதல் நடத்துகின்றனர்.

கம்பளையைச் சேர்ந்த ஆறுமுகம என்பவரே காணமல்போய்விட்டதாக அறியப்படுகிறது.

## சந்திரக்கல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்து வாக்குகளும் பாதகமாக ஒன்பது வாக்குகளும் கிடைத்தன. அச்சமயம் நான்குஅங்கத்தவர்கள்சபையில் இருக்கவில்லை.

மீன்சந்தைக்கு பத்தொன்பதாயிரம் ரூபாவுக்கு கோரப்பட்ட கேள்விப்பத்திரம் நிதிக்குழுவில் ஏற்கப்பட்டபோதும் நேற்றைய விசேஷ கூட்டத்தில் தோற்கடிக்கப்பட்டது. இதனல் மீன் சந்தைக்கு மீண்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதெனஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

தற்பொழுது கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்சந்திரக்கல்லை யாழ்ப்பாணத்துக்கும் கொண்டுவரசம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்பதென திரு. தம்பு கந்தையாவினுல் கொண்டுவரம்பட்ட தீர்மானம் திரு. அல்பிரட் துரையப்பாவால் அனுமதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. (கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org